நுஸ்ரதுல் ஹமீத்
பி
தப்ஸீரிகுர்ஆனில் மஜீத்.

28 OCT 1926
MADRAS

1வது பாகம் அலிபுலாம் மீம் ஜுஸ்வு.

இஃது

ரவணசமுத்திரம் மௌலானா மௌலவி

பீர் முஹம்மது சாஹிபு அவர்களால்,

சுன்னத்துல் ஜமா அத்து இமாம்கள்

அரபியில் இயற்றப்பெற்ற

தப்ஸீர்களான ரூஹுல்பயான், பைலாவி,

மஆலிமுத்தன்ஸீல், மபாத்திஹுல்கைபு, ஜலாலைன்

இவைகளிலிருந்து

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருந்த கையெழுத்து பிரதியை

ஷை.பார்களின் பவுத்திரர்

எம். மக்தூம் ஆலிம் சாஹிபு அவர்களால்,

அம்பாசமுத்திரம்,

அகஸ்தியர் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1345-ம் ஹு ரபியுலவ்வல்மீ

1926

Registered Copy Right.

Q7
N26.
179845

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

மதிப்புரை.

வேலூர், பாக்கியாதுஸ்ஸாலிஹாத்துமத்ரசாவிற் கல்விபயின்று தஹ்ஸீலாகி மௌலவி யென்று சனது பெற்றவர்களும், திருச்சி மஜ்லிசுல்உலமாவின் பொறுப்பில் வாஇஸாய் நியமிக்கப்பட்டு வெகுநாளாக மார்க்கப் பிரசாரஞ் செய்தவர்களுமாகிய திருச்சிஜில்லா லெப்பைக் குடிக்காடுவாசி, ஜனாப்மௌலானாமௌலவிசே.ப. அஹ்மதுபாக்ஷாசாஹிபு அவர்களின் மதிப்புரை பின்வருமாறு

நான், ரவணசமுத்திரம் ஹிதாயத்தால் முஸ்லிமீன்மத்ரஸா ஸ்தாபகர்களும் எனது ஆப்த நண்பர்களுமான மௌலவி, கோ. இ. செய்யது சுலைமான் சாஹிபுஅவர்களின் தகப்பனாரும் மௌலவி, கோ. இ. சாகுல் ஹமீதுசாஹிபுஅவர்களின் தமையனாரும், இன்னும் இரு சஹாக்களும் ஹஜ்ஜுக்கு சென்று வந்தவர்களைக் கண்டுக்கொள்வதற்காக ரவணசமுத்திரத்திற்கு வந்தேன். அச்சமையம், கனம் எம். எம்: மக்தூம்அவர்கள் நுஸ்ரதுல் ஹமீத்பீ தப்ஸீரி குர்ஆனில் மஜீத் என்னும் தமிழ் தப்ஸீர் 1-வது பாகம் அலிபுலாம்மீம்ஜுஸ்வை எனக்குக் கொடுத்தார்கள். அதை நான் பார்வையிட்டதில் நமது திருகுர்ஆன் ஷரீபின் அரபி தப்ஸீர்களுக்கு இந்தமொழிபெயர்ப்பு சரியாயும் சுன்னத்துல்ஜமா அத்துக் கொள்கைக்கு விதாப்பமில்லாமலும் இருக்கின்றது. முஸ்லீம் சகோதரர்களுக்கு இந்த தப்ஸீர் முக்கியமாய் வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். மேலும், அதை யாவரும் ஆதரிக்கும்படி கோருகிறேன்.

ரவணசமுத்திரம்
ஹிஜ்ரி 1345-ம்ளு
ரபீயுலவ்வல்மீ 1-உ.

இப்படிக்கு,
செ. ப. அஹ்மதுபாத்ஷா,

CENTRAL LIBRARY OF BOOKS
28 OCT 1926
MADRAS

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

நுஃஸ்ரதுல் ஹமீத் பீ தப்ஸிரிகுர்ஆனில் மஜீத்.

என்னும்

"திரு குர் ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு"

985
297.2

ஸூரத்துல்பாத்திஹா — 1-வது அத்தியாயம்.

7 வசனங்கள்.

திருமக்காவில் இறங்கியது.

நிகரற்ற அல்லா (ஹ்)வென்னும் திருநாமத்தால் ஆரம்பஞ் செய்கிறேன் பூலோகத்தில் யாவருக்கும் கிருபை செய்கிறவன் ஆகிரமென்னும் இறுதி நாளில் மூமீன்களாகிய அச்சந்தீர்ந்தவர் கட்கு சொந்தமாய்க் கிருபை செய்கிறவன்.

பிஸ்பில்லாஹி என்று சொல்லப்பட்டுள்ள வாக்கியமானது திருகுர் ஆனுக்கு திறவுகோலாகவும், லவ்ஹுல் மஹ்பூலு பலகையில் கலம் (எழுது கோல்) எழுதினதில் ஆரம்பவாக்கியமாகவும், நமது ஆதிபிதாவாகிய ஹஜரது ஆதம் [அ'லை) அவர்கள் மீதில் இறக்கப்பட்டுள்ளதில் முந்தினதாகவுமிருக்கின்றது.

கவனிப்பு:— இம்மாதிரி பைக்கா பெரிய எழுத்திலுள்ள விஷயங்கள் குர்ஆன் ஷரீபின் அர்த்தங்கள்.

இம்மாதிரி ஸ்மால் பைக்கா சிறிய எழுத்திலுள்ள விஷயங்கள் சப்பு நுஸூல் ஹதீது ரிவாயத்து, மற்றும் விஷயங்கள்,

179845

ஆனதால் நாம் (துன்யா) பூலோகத்தில் எந்தக்காரியத்தையாவது செய்ய நாடுவோமாகில் இம்மகுத்துவந்தங்கியபிஸ்மில்லாஹியைக்கொண்டு துவக்கஞ் செய்கிறது மிகவும் நன்று. (ஹராமான) மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ள செய்கைகளுக்கு பிஸ்மி சொல்வதை விலக்கப்பட்டிருக்கின்றது.

ரிவாயத்து:— அல்லாஹுதஆலாவுக்கு 3000 ம் திருநாமங்களிருக்கின்றன. அவற்றில் நின்றும் 1000தை மலக்குகளாகிய அமரர்களுக்கும் 1000தை தீர்க்கதரிசிகளுக்கும், அறிவித்தான். 300ரை தௌராத்து வேதத்திலும், 300ரை ஜபூர் வேதத்திலும், 300ரை இன்ஜீல் வேதத்திலும் 99தை புர்கான் வேதத்திலும், அருளினன். அல்லாஹ் வென்னும் ஒரு நாமத்தை மாத்திரம்தான் தெரிந்துக்கொண்டான். இம்மூவாயிரம் திருநாமத்தின் அர்த்தத்தை, அல்லாஹ், ரஹ்மான், ரஹீம், என்னும் இம்மூன்று நாமத்திலுமமைத்தான். ஆனபடியால் எவனொருவன் இதையறிந்து பிஸ்மி சொல்லுவானாகில் அவன் மேற்கூறப்பட்டுள்ள 3000ம்திருநாமத்தைக்கொண்டு இறைவனை ஸ்தோத்திரஞ் செய்தவன் போலாவான்.

ஹதீது:— நபிபெருமானவர்கள் திருவுளமானார்கள், பிஸ்மி எழுதப்பட்டுள்ள ஒரு துண்டுக்கடிதமானது கீழே கிடக்கக்கண்டு நாயனின் திருநாமத்தைச் சங்கைசெய்யக்கருதினவனாய் அதை பூமியில்நின்றும் உயர்த்துவானாகில் உண்மையோடு ஆண்டவனைப்புகழ்ந்த கூட்டங்களில் நின்றுமுள்ளவனாயிருப்பான், மேலும், அவனின் மாதா பிதாக்களுக்கு அதாபென்னும் வேதனை இலேசாக்கப்படும்.

1.

எல்லாப்புகழும் சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வுக்கே அவன் ஆலத்தாரை படைத்து ஆள்கிறவன்.

ஆலத்தார் என்பது, அல்லா(ஹ்) அல்லாதவர்களாகிய மனுஜின், அமரர் முதலிய சகல கூட்டங்கள், இவர்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆலமென்று பெயர்.

புகழில் நான்குவிதமுண்டும். அவற்றில் 1-வதுநாயன்தன்னைப்புகழ்வது, 2-வது தன்னுடைய அன்பியாக்கள், அவுலியாக்களைப்புகழ்வது, 3-வது அடியார் தன்நாயனைப்புகழ்வது, 4-வது அடியார் ஒருவரையொருவர் புகழ்வது. ஆக இந்நான்கு வகை புகழும் நாயனுக்கே உரியது.

2

பூலோகத்தில் யாவருக்கும் கிருபை செய்கிறவன், ஆகிரமென்னும் இறுதிநாளில் மூமீன்களாகிய அச்சந்தீர்ந்த பக்தர்களுக்குச் சொந்தமாய்க் கிருபை செய்கிறவன்.

3

கூலி கொடுக்கிற நியாயத்தீர்ப்பு நாளில் அவன் தான் அரசன்.

அறிந்துகொள்:— அல்லாஹுத் ஆலா சகல நாட்களிலும் அரசனயிருக்கக் கூலி கொடுக்கிற நாளைக்கு அரசன் என்று சுட்டிச்சொன்னதின் கருத்தாவது, பூலோகத்தில் ஒவ்வொருவரும் செய்துவந்த நன்மைதின்மைகளைப்பற்றி நன்ருய் விஜாரித்து நியாயத்தீர்ப்பளிக்கும் கியாமநாளில் அல்லா(ஹ்)வைத்தவிர மற்றவர்களுக்கு அரசுரிமை கிடையாது. ஆனபடியால் அவ்வாறு சுட்டிக்கூறப்பட்டிருக்கின்றது.

ஹதீது:— நபிபெருமானவர்கள் திருவுளமானுர்கள். அரசர்களைக் கியாமநாளில் நரகத்துப்பாலத்தைக் கடக்கும்படி இறைவனல் உத்திரவு செய்யப்படும். அப்பொழுது அவர்கள் அதில் உடல்பதறி, நடுநடுங்கி நடப்பார்கள். அவர்கள் பூலோகத்தில் இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நெறிநீதியாய் நடந்து வந்திருப்பார்களானல் அப்பாலத்தில் செவ்வையாய் நடந்து செல்வார்கள். இறைவனைப்பயப்படாமல் எதேச்சதிகாரத்துடன் அக்கிரும அரசாட்சிபுரிந்து அநீதியாய் நடந்து வந்திருப்பார்களானல் அப்பாலத்தில் நடந்து செல்லும்போது கால்தவறி நரகத்தின் கீழ்விழுந்து முழுகி வேதனையை அனுபவிப்பார்கள்.

அரசர்கள் நீதியாய்ச் செங்கோல் நடத்திவருவார்களானல் நாடு செழித்தோங்கும். கொடுமையாய் நடத்தி வருவார்களானல் நாட்டில் பஞ்சமுண்டாகி பரகது மாறிவிடும்.

ஹிகாயத்து:—பர்ஷியாதேசத்து அரசனுன;நவ்ஷேர்வான்,ஒருநாள் வேட்டையாடச் சென்றிருந்தபோது வழிதவறி ஒருதோட்டத்தில்போய்ச் சேர்ந்தான். அப்பொழுது அவ்வரசனுக்குத் தாகமதிகமாகி அத்தோட்டத்திலிருந்த மனிதரிடம் என் நண்பனே! எனக்குத் தாகமதிகமாயிருக்கின்றது, எனக்கொரு மாதளம்பழங் கொடு என்று கேட்டான். அம்மனிதன் அரசன் வேண்டுதலுக்கிணங்கி ஒருமாதளம் பழங்கொடுத்தான். அதை அரசன்வாங்கி புசித்ததில் அதுமிகவும் உருசியாயிருந்தது.அத்தோட்டத்தை அபகரித்துக்கொள்ளக் கருதினவனய் அம்மனிதனிடம் மற்ருெரு பழம் கேட்டான் மறுபடியும், அம்மனிதன் ஒருபழங்கொடுத்தான், அதை அரசன் வாங்கி புசிக்கவே அதுமுன் பழத்தைப்போலிருமல் சாரில்லாத உருசியற்றபழமாயிருந்தது. இதையறிந்து அரசன் அம்மனிதரிடம் இப்பழம் என் உருசியற்றதாயிருக்கிறதென்று வினவினன். அதற்கு அம்மனிதன் அரசன் அநியாயஞ் செய்யக்கருதியிருக்கலாம் அதின் நிமித்தம் பழம் உருசியற்றதாயிருக்கிறதென்று பதிலிறுத்தான். அரசன் அத் துாஎண்ணத்தை நீக்கி விட்டு மீண்டும் ஒருபழம் அம்மனிதனிடங் கேட்டான். அம்மனிதன் மீண்டும் ஒருபழம் கொடுத்தான். அதைவாங்கி புசித்ததில் முன்பழத்தைவிட அதிக உருசியாயிருந்ததை அரசன் அறிந்து இது என்! இவ்வளவு உருசியாயிருக்கிறதென்று வினவினன். அதற்கு அம்மனிதன் அரசன் துர்எண்ணததை நீக்கியிருக்கலாமென்று பதிலிறுத்தான். அன்றுமுதற்கொண்டு நவ்சேர்வான் அரசன் அநியாயத்தைவிட்டும் நீங்க மன்னிப்புத் தேடிக்கொண்டான். அவ்வரசனே நீதிவானென்று ஜனங்களால் போற்றப்பட்டு வருகின்றது.

4

உன்னைத்தான் வணங்கிறேம் மேலும் உன்னிடந்தான் உதவித்தேடுகிறேம்.

அறிந்துக்கோள்:- பாத்திஹா என்னும் இந்த அல்ஹம்து ஸூரத்தை யோதுகிறவன் ஒருவனுயிருப்பதால் உன்னைத்தான் வணங்குகிறேனென்று ஒருமையாய்ச் சொல்லவேண்டியதிருக்க உன்னைத்தான் வணங்கிறோமென்று பன்மையாய்ச் சொல்வதின் கர்த்தாவது, தன்னையும், தன்னுடனிருக்கும் அமராகளையும், மற்றும்(மூமினுன)அச்சந்தீர்ந்த அடியார்களின் வணக்கங்களையும், தன்னுடைய வணக்கத்துடனே சேர்த்துக்கொண்டு பன்மையாகச் சொல்லுகிறான் என்பதே.

ரிவாயத்து:— ஹஜாரது இப்ராஹீம் (அ'லை) அவர்களை நம்ரூது அரசன் அக்கினி குழியில் தள்ளி யிருக்கும்போது தேவதூதராகிய ஜிப்ரீல் (அ'லை) அவாகளிடம் வந்து உமக்கு இப்பொழுது என்னளவில் நாட்டமுண்டா? வெனவினவினார்கள். அதற்கு இப்ராஹீம் (அ'லை) ஜிப்ரீல் (அ'லை) அவர்களை நோக்கி உம்மிடமு் எனக்கு நாட்டமில்லை. வலுப்பமாகிய என் நாயனிடம் எனக்கு நாட்டமுண்டா யிருக்கிறதென்று பதிலிறுத்தார்கள். அப்படியானால் அவனிடமே கேளுமென்று சொன்னார்கள். அதற்கவர்கள் என் ஸ்திதியை இறைவன் நன்றாயறிந்திருக்கிறான், நான் கேட்கத் தேவையில்லை என்று கூறினார்கள்.

ஆனபடியால், நண்பர்களே! நமக்கு கஷ்டம் ஏற்படுமாயின் ஆண்டவனளவில் பறஞ்சாட்ட வேண்டுமேயன்றி மற்றவர்களைக் கொண்டு உதவி தேடுதல் கூடாது.

5

எங்களை செவ்வையான பாதையளவில் நேர்வழி காட்டு கர்த்தாவது இஸ்லாமதத்தில் தரிபடுத்து என்பதே.

6

அதாவது உனது அனுக்கிரஹம்பெற்ற அன்பியாக்கள், அவ்லியாக்கள், சாலிஹீன்கள், இவர்களின் பாதையில் நேர்வழி காட்டியருள்.

7

உன் சினத்திற்குள்ளான துன்மார்க்கர்களாகிய யூதர்களின் பாதையிலும், கிறிஸ்தவர்களின் வழியிலுமாக்காதே.

நாயனே எங்கள் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்வாயாக.

ஆமீன் என்னும் வாக்கியமானது திரு குர்ஆனில் உள்ளதல்ல எனினும் அது இன்ஜீல் வேதத்திலுள்ளது அதை பாத்திஹாவுக்குப்பின் கூறுவது ஸுன்னத்து.

ஹதீது:— நபிபெருமானவர்கள் திருவுளமானார்கள், நான் பாத்திஹா என்னும் ஸூரத்தை யோதி முடிக்கும்போது ஜிப்ரீல் (அ'லை) எனக்கு ஆமீன் என்று கற்றுத்தந்து அது குர்ஆனுக்கு முத்திரை யாயிருக்குமென்று சொன்னார்கள்.

இந்த பாத்திஹா ஸூரத்தின் மகத்துவம் பின்வருமாறு.

ஹதீது:— நபிபெருமானவர்கள் அருளியதாவது, இந்த பாத்திஹா வென்னும் ஸூரத்தானது தௌராது வேதத்திலிருக்குமாகில் மூஸா (அ'லை) அவர்களின் கூட்டங்கள் யூதர்களாகமாட்டார்களென்றும், ஸபூர்வேதத்திலிருக்குமாகில் தாவூது (அ'லை) கூட்டங்கள் ரூபம் மாற்றப்படமாட்டார்களென்றும். இன்ஜீல் வேதத்திலிருக்குமாகில் ஈசா (அ'லை) கூட்டங்கள் கிறிஸ்தவர்களாகமாட்டார்களென்றும் கூறினார்கள்.

எந்த முஸ்லிமாவது பாத்திஹா வென்னும் ஸூரத்தை முழுதும் ஓதினால் அவன் திருகுர்ஆன் ஷரீபு முற்றும் ஓதினவன் போலாவான்- இன்னம் மூமினான ஆண் பெண் அடங்கல்களுக்கும் தான தர்மஞ் செய்த கூலியை இறைவன் அளிப்பான்.

ஸூரத்துல்பகரா—2-வது அத்தியாயம்.
திருமதீனாவில் இறங்யகிது.
286 வசனங்கள்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய வல்ல இறைவன் திருநாமத்தால்,

1

இதன்கர்த்தை அல்லாஹ் அறிவான். அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா ஜிப்ரீல் (அலை) மூலியமாக நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கட்கு அருளிய திருகுர்ஆன்

ரபீவுப்னு அனஸு (ரலி) கூறுவதாவது; அலிபு, லாம், மீம், என்னும் இம்தீ மூன்று அச்சரங்கூடிய வாக்கியம் அனல்லாஹுல் லதீபுல்மஜீத். என்பதாயிருக்கும் இதன் தாத்-பரியமாவது, உன்னதமான தயாள சிந்தையுள்ள அரசனான அல்லா(ஹ்) வாயிருக்கும்.

ரிவாயத்து:— ஹஜாரது மூஸா (அலை) அவர்களுக்கு ஆண்டவன் தௌராது திருமறையை இறக்கினான் அவ்வேதமானது ஆயிரம் அத்தியாயமுள்ளதாயும், ஒவ்வொரு அத்தியாயமும் ஆயிரம்வசனமடங்கியதாயுமிருந்தன அப்பொழுது மூஸா (அலை) அவர்கள், இம்மஹாத்ரியாயத்தை யார் ஓதவும்: பாடமிடவும் சக்தி பெருவார்களென்று நாயனிடம் கேட்டார்கள். அதற்கு நாயன், ஆய் மூஸாவே! நான் இதைவிட வலுப்பமான திருமறையொன்றை தீர்க்கதரிசிகட்கெல்லாம் மேலானவரும், இறுதி காலநபியாகிய முஹம்மது (ஸல்) மீதிலிறக்கிவைப்பேனென்று பதிலிறுத்தான். அப்பொழுது ஆண்டவனே! அவருடைய உம்மதுகள் சொற்ப ஆயுளுடையவர்களே! அவர்கள் அதை எங்ஙனம் ஓதுவார்களென்று வினவினார்கள், அதற்கு ஆண்டவன், நான் அதையவர்கட்கு இலேசாக்கிக் கொடுப்பேன் அவர்

களின் பால்யர்களெல்லாம் அதையோதுவார்களென்று பதிலிறுத்தான் அப்பொழுது மூஸா(அ’லை)காயனிடம் நீ அதைஎங்ஙனம் இலேசாக்குவாய் என்றுவினவினார்கள். எனது 103 கிதாபிலுள்ள யாவற்றையும் இறுதிநீர்க்கதரிசியாகிய முஹம்மது (ஸ’ல்) அவர்களின் கிதாபாகிய திருகுர்ஆனில் சொல்வேன், அக்கிதாபு அடங்கல்களையும் 114 அத்தியாயத்திலமைப்பேன் அந்த அத்தியாயம் முழுவதையும் முப்பது ஜுஸ்விலாக்குவேன், அந்தமுப்பது ஜுஸ்வுவையும் எழு ஸுப்இல் அமைப்பேன், அந்தஎழு ஸுப்வுடைய அர்த்தத்தையும், பாத்திஹா என்னும் ஸூரத்திலுள்ள எழு ஆயத்தில் அமைப்பேன், அந்த எழு ஆயத்தின் அர்த்த்தையும் எழு அச்சரத்தில் அமைப்பேன் அதாவது பிஸ்மில்லாஹி என்னும் வாக்கியமாயிருக்கும். இப்புதயலடங்கல்களை அலிபுலாமீம் உடைய அலிபில் அமைத்து அதைக் கொண்டு பகரா உடைய ஸூரத்தை துவக்கி அலிபுலாமீம் என்று சொல்வேனென்றான்.

இவ்வாறு மூஸா (அ’லை) அவர்களுக்கு தெளிவாய் வார்த்தைப்பாடு செய்திருக்க நம்நபிபெருமானவர்கள் மீதில் இககுர்ஆன்ஷரீபை இறக்கவே நயவஞ்சகக்காரர்களாகிய யூதர்கள் அக்கிதாபு இதல்லவென்று நிராகரித்தார்கள். அதர்க்காக அல்லாஹுத்தஆலா சொல்லுகிறான்.

2

இந்த குர்ஆன் ஆகிறது ஆண்டவனுலிறக்கப்பட்ட உண்மையானவேத மென்பதில் யாதொரு சநதேகமில்லை. இது முத்தகீன்களாகிய பயபக்தியுடையவர்களுக்கு நேர்வழிகாட்டும்.

முஸ்லீம் மேதாவிகளிலொருவராகிய ஹஜரத்து உமறுப்னு அப்துல் அஜீஸ்(ர’ழி) அவர்கள் கூறுவதாவது (தக்வா) பயபக்தி என்பது ஆண்டவன் விலக்கின துன்மார்க்கத்தைவிடுவதும், அவன் ஏவின நற்காரியத்தை செய்வதுமாயிருக்கும்’

இப்னு அப்பாஸ் (ர’ழி) அவர்கள்கூறுவதாவது, தன்னுடைய ஆத்மாவை மற்றவருடைய ஆத்துமாவை விட மேலானதென்று கருதாமலிருக்கிறதுதான் தக்வாவா யிருக்கும்.

அறிந்துக்கொள்:— சிலமனிதர்கள் திருகுர்ஆனைக்கொண்டு மோக்ஷமடையாவிடினும் திருகுர்ஆன் நேர்வழி காட்டுவதை விட்டும் நீங்காது. ஏனெனில் குருடன் சூரியனைக்காண சக்திபெறாவிடினும், சூரியன் சூரியன்தான், ஆனபடியால் திருகுர்ஆன் ஷரீபானது ஏவல் விலக்கல் செய்திருக்க அதைக்கற்றுணர்ந்து நேர்வழி பெறாதவனுக்கே நஷ்டம்.

3

பயபக்தியுடையவர்கள் மறைவானவைகளைக்கொண்டு (ஈமான்) உண்மை கொள்வார்கள். மேலும் நிலைபாடாக தொழுதுவருவார்கள். மேலும் நாம் கொடுத்துள்ள பாக்கியத்தில்நின்றும் தானதர்மங்கள் செய்வார்கள்.

இப்னு அப்பாஸ் (ரழி,) அவர்கள் திருவுளமானார்கள்:— மறைவானவைகள் என்பது மலக்குகளாகிய அமரர்கள், சுவர்க்கம், நரகம், இறந்தபின் எழுப்புதல், விராதுல் முஸ்தகீம்பாலம், மீஸான், என்னும் நன்மை தின்மை நிறுக்கும் திராசு இவைகளாயிருக்கும்.

4

மேலும் உம்மீதிலிறக்கப்பட்டுள்ள வேதத்தைக் கொண்டும், உமக்குமுன் இறக்கப்பட்டுள்ள வேதங்களைக்கொண்டும், இறுதிநாளைக்கொண்டும் உண்மை கொள்கிறவர்களுக்கு இது நேர்வழி காட்டும்.

5

மேற்கூறப்பட்டுள்ள இவர்கள்தான் தன்னுடைய நாயனில் நின்றுமுள்ள சன்மார்க்கத்திலிருக்கிறார்கள் இன்னும் அவர்கள்தான் ஜெயம்பெற்றவர்கள்.

6

நிச்சயமாய்க்காபிராஞர்களே, அவர்களுக்கு நீர் அச்சம்பூட்டுவதும், அச்சம்பூட்டாமலிருப்பதும் ஒன்றுதான் அவர்கள் ஈமான்கொள்ள மாட்டார்கள்.

இந்த ஆயத்தானது அபூஜஹ்லு, அபூலஹபு, போன்றவர்கள் மீதில் இறங்கிற்று.

7

ஆண்டவன் அவர்களின் ஹிருதயங்களிலும், அவர்களின் கர்துகளிலும் முத்திரையிட்டுவிட்டான். மேலும் அவர்களின் பார்வைகளின்மீது மூடியுண்டாயிருக்கின்றன. மேலும் அவர்களுக்கு (அவ்வுலகில்) கடுமையான இம்சையுண்டும்.

அறிந்துக்கோள்:— அவர்களின் ஹிருதயங்கள் நற்காரியங்களை நாடாது, அதை விளங்கவுமாட்டாது. அவர்களின் காதானது ஹக்கென்னும் உண்மையைக் கேட்காது. அவர்களின் கண்ணானது நாயன் திருவ்ஷ்டாந்தங்களைப் பார்க்காது.

8

மனிதர்களிற் சிலர் ஆண்டவனைக்கொண்டும், இறுதிநாளைக் கொண்டும், (ஈமான்) உண்மைகொண்டோமென்று சொல்வார்கள். அவர்கள் உண்மை மூமீன்களல்ல.

இந்த ஆயது அப்துல்லாஹிப்னுஉபை போன்றவர்கள் ஹக்கில் இறங்கிற்று. அம்முனாபிகீன்களாகிய ஒப்பாசாரக் கள்ளர்கள், நபிபெருமா

னவர்களின் (அஸ்காபி) சிநேகிதர்களை விட்டும் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு உண்மை முஸ்லீம்களைக்கண்டால் நாங்கள் உண்மை முஸ்லீமென்று கூறுவார்கள் ஹிருதயத்தில் அதற்கு மாற்றமான நிர்ணயங்கொண்டிருப்பார்கள்.

9

அம்முனாபிகீன்களாகிய ஒப்பாசாரக் கள்ளர்கள், அல்லாவுக்கும் மூமீன்களுக்கும் சதிமானஞ்செய்கிறார்கள். அவர்கள் புரிந்து வரும் சதியானது அவர்களுக்கேயல்லாது மற்றவர்களுககல்ல அததீங்கானது தங்களுக்குவந்து சம்பவிக்குமென்று அவர்கள் உணரவில்லை.

ரிவாயத்து:— முனாபிகீன்களாகிய ஒப்பாசாரக் கள்ளர்களை நரகத்திற்போட்டு இமிசிக்கப்படும். அந்த இமிசையைத் தாங்கமுடியாமல் ஆண்டவனே! என் குற்றத்தை மன்னித்து இரக்ஷிப்பாயாக என்று சப்தமிடுவார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி இதோ வாசல் திறந்திருக்கின்றது, அதனுட் செல்லுங்களென்று சொல்லப்படும். அவர்கள் நமக்கு க்ஷேமமுண்டாயிற்றெண்ணி அவ்வாசலுக்கு வேகமாய்ச் செல்வார்கள். அவர்கள் அவ்வாசலுக்கு வந்தவுடன் அவர்களை அதனுள் தள்ளி கதவையடைத்து, விக்கிரஹம், பேய், பிசாசு, முதலியவைகளை இமிசிக்கப்படும் பெட்டியிற் குள்ளும், கிணற்றுக்குள்ளும் அடைத்து இமிசிக்கப்படும்.

ஹதீது:— நபிபெருமான் (ஸல்) திருவுளமானார்கள்:— கியாம நாளில் சிலமனிதர்களுக்கு சுவாக்கத்தைக் காண்பிக்கும்படி உத்திரவுசெய்யப்படும். அதின்பிரகாரம் சுவர்க்கத்தைக் காண்பிக்க அவர்களை அழைத்துக்கொண்டு செல்வார்கள். அவர்கள் சுவர்க்கம் நெருங்கியவுடன் அதின் வாடையைமுகர்ந்து களிப்புற்று உட்செல்ல முயல்வார்கள். உடனே அவர்களை அப்புறப்படுத்தப்படும். தாங்கள் ஏமாந்துபோனதைக்குறித்து ஆண்டவனே! சுவர்க்கவாதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாக்கியங்களை எங்

களுக்குக் காண்பிக்குமுன் நரகத்துக்கு அனுப்பியிருந்தால் நலமாயிருக்குமேயென்று சஞ்சலமடைந்தவர்களாய் நமக்கு இப்பாக்கியம் கிடைத்ததில்லையே! என்று புலம்புவார்கள்.

அப்பொழுது உங்களை இவ்வாறு செய்யவேண்டுமென்று நான் கருதியிருந்தேன். நீங்கள், தனித்திருக்கும்பொழுது பெரும் பாவங்களைக் கொண்டு என்னிடம் போர்நடத்தினீர்கள். மனிதர்களைக் கண்டதும் ஹிருதயத்தில் தூஎண்ணம் வைத்துக்கொண்டு பக்தியுடையவர்கள்போல் முகமலர்ச்சியாய் அவர்களிடம் நடந்துகொண்டீர்கள். மேலும் மனிதர்கட்கு பயந்தீர்கள், எனக்குப் பயப்படவில்லை என்னைவிட மனிதர்களை மேலாய் பாவிததீர்கள், மனிதாகளுக்காக பாவத்தைச் செய்தீர்கள் எனக்காக பாவத்தை விடவில்லை ஆதலின் இப்பொழுது உங்கட்கு வலுப்பமான நன்மையை நீக்கி கடூரமான இமிசையை நீங்கள் செய்த தீமைக்கு கூலியாகக் கொடுக்கிறேன். நீங்கள், பூலோகத்தில் புரிந்துவந்த துர்ச்செயல்களுக்கு இதுதான்கூலி என் ஆக்கினைப்படி பூலோகத்தில் நடந்துவந்திருப்பீர்களேயாகில் நிச்சயமாய் உங்கட்கு சுவர்க்கம் கிடைத்திருக்கும் இப்பொழுது வருந்துவதில் பயனில்லை.

10·

அவர்களின் ஹிருதயங்களில் நோயுண்டாயிருக்கின்றது ஆனபோதே அல்லாஹுத் ஆலா அவர்கட்கு நோயை அதிகமாக்கினன் அவர்கள் (அல்லா (ஹ்) ரசூலைப்) பொய்யாக்கின காரணத்தினுல் அவர்களுக்கு தொம்பலமான இமிசை யுண்டாயிருக்கின்றன.

அறிந்துக்கோள்;— திரு குர்ஆன் ஆயது ஒன்றின்பின் ஒன்று துடர்ச்சியாய் இறங்கிக்கொண்டிருந்தன. அப்பொழுது அம்முனபிகீன்களாகிய ஒப்பாசாரக் கள்ளர்கள், சந்தேகங்கொண்டவர்களாயிருந்தனர். அவர்களின் ஹிருதயங்களில் சந்தேகமும் ஒப்பாசாரக் கள்ளத்தனமும் நிறைந்திருந்தன என்று சொல்லாமல் நோயுண்டாயிருந்தன என்று சொன்னதின் கருத்தாவது நோயின்குணம் பலஹீனப்படுத்தும் மதத்தில் சந்தேகங்கொண்

வதற்கு நோயென்று சொல்லப்படும் நோயானது சரீரத்தைப் பலவீனப் படுத்துவதுபோல் சந்தேகமானது மதத்தைப் பலவீனப்படுத்தும். ஆதலின் சந்தேகத்திற்கு நோயென்று சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும், மேலும் அந்த ஒப்பாசாரக் கள்ளர்கள் (முனபிக்) பிரதி (ஆயது) திருவசன மிறங்கும்ஃதாரெல்லாம் மாற்றஞ்செய்வதிலேயே அதிகரித்துக்கொண்டிருந்தனர் இறைவன் அவர்கட்கு சந்தேகமென்னும் நோயை அதிகப்படுத்திக்கொண்டேயிருந்தான்.

11

மேலும் மனிதர்களை ஈமான் கொள்ளவிடாமல் தடுத்து பூமியில் தீங்கிழைக்க வேண்டாமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டால் நாங்கள் சமாதானஞ்செய்கிறவர்களேயன்றி கெடுதல்புரியக் கூடியவர்களல்ல வென்று கூறுவார்கள்.

12

மெய் விசுவாசிகளே! அறிந்துக் கொள்ளுங்கள் நிச்சயமாய் அவர்கள்தான் தீங்கிழைக்கிறவர்கள். எனினும், தாங்கள் தீங் கிழைக்கிறவர்களென்று அவர்கள் உணரவில்லை.

13

இன்னும் அந்த ஒப்பாசாரக்கள்ளர்களை நோக்கி நீங்கள், அப்துல்லா ஹிப்னுஸலாம் முதலியவர்கள் ஈமான்கொண்டது போல் இஸ்லாம் மதத்தை உண்மை கொள்ளுங்களென்று சொன்

னல் நாங்கள் அம்மதியீனர்களைப்போல் உண்மை கொள்ளமாட்டோமென்று பதிலிறுப்பார்கள். மெய்விசுவாசிகளே! அறிந்துக் கொள்ளுங்கள் நிச்சயமாய் அவர்கள்தான் மதியீனர்கள் எனினும தங்கள்மதியீனத்தை அவர்கள் அறியவில்லை.

14

இன்னும் அவர்கள் உண்மை (ஈமான்) கொண்டவர்களை சந்தித்தால்நாங்களும்ஈமான்கொண்டவர்களென்று கூறுவார்கள் இனி அவர்களின் நண்பர் முனபிகீன்களாகிய ஷைத்தான்களிடம் தனித்தால், நாங்கள் உங்களைச் சேர்ந்தவர்களேயன்றி அவர்களைச் சேர்ந்தவர்களல்ல நாங்கள அவர்களைக் கேலிபண்ணுகிறவர்களேயன்றி வாஸ்துவத்தில் நாங்கள் உண்மைக் கொண்டவர்களல்ல.

ரிவாயத்து;— அப்துல்லாஹிப்னு உபயி என்னும் முனபிகீனுகிய ஒப்பாசாரக்கள்ளனும் அவன் சிநேகிதர்களும் ஒருஸ்தலத்திற்குப் பிரயாணஞ்செல்லுகையில் இடவழியில் நபிபெருமானவர்களின் நண்பர்களாகிய அஸ்ஹாபிகளில் நின்றும் ஒருகூட்டத்தாரைச் சந்தித்துக்கொண்டார்கள். அப்பொழுது அப்துல்லாஹப்னுஉபய் என்பவன் தன்னுடனிருக்கும் நண்பர்களை நோக்கிஇதோவருகின்ற மூடர்களுடன்பரியாசமான சம்பாஷணைப் புரிந்து அவர்களின் தீங்கைவிட்டும் நான் தப்பித்துக்கொள்ளும் பாவினையைக்கண்டு. பிரமிப்பீர்கள் என்றான்! அந்த அஸ்ஹாபிகள் சமீபத்தில் வரவே! ஹஜரது அபூபக்கர்சித்தீகு (ரழி,) அவர்களின் கரத்தைப்பிடித்துக் கொண்டு சித்தீகே உமக்கே ஆசீர்வாதம். நீர்தைமுடைய வமிஷத்தில் நாயகம், இஸ்லாமுக்குஷைகு, மலைபொதும்பில் நபியுல்லாவுடன் தனித்திருந்தவர் உடல், பொருள், ஆவி, யாவற்றையும் ரஸூலுல்லா அவர்களுக்கு தியாகஞ்செய்தவரென்று அவர்களுக்கு திருப்தியுண்டாகும்படி புகழ்ந்தான் பின்புஹஜரது உமர் (ரழி,) அவர்களையும், ஹஜரது அலி (ரழி,) அவர்களையும் அவர்களுக்கு ஏற்றவாறு திருப்தியுண்டாகும் வண்ணம் போற்றிப்புகழ்ந்தான்.

அப்பொழுது அலி (ரழி.) அவனைப்பார்த்து ஆய் அப்துல்லாவே! அல்லா(ஹ்)' வை பயந்துக்கொள். முனபிக்தனம்செய்கிறவர்கள் இறைவனின் சிருஷ்டிப்புகளில் மகாகெட்டவர்கள் என்று புத்திமதி போதித்தார்கள். அவன் அவைகளைக்கேட்டு அலியே! ஆத்திரப்படவேண்டாம், என்மீது ஏன் குறைகூறுகிறீர், ஆண்டவன்மீது ஆணையாக நீங்கள் ஈமான்கொண்டது போல் நானும் ஈமான் கொண்டிருக்க என்னை ஏன் முனபிக் என்னும் ஒப்பாசாரக்கள்ளனென்று அழைக்கிறீர் என்று பதிலிறுத்து அவர்களை அனுப்பிவிட்டான். பின்பு தன்நண்பர்களை நோக்கி இம்மதிஈனர்களை நான் எப்படி ஏமாற்றினேன் பார்த்தீர்களா? உங்களுக்கும் ஒருசமயம் இவ்வாறு நேர்ந்தால்நீங்களும் இவ்வண்ணஞ்செய்யுங்களென்று கூறினன். இப்படிப்பட்ட முனபிகீன்களாகிய ஒப்பாசாரக்கள்ளர்களை, நாயன் கியாம நாளில் கடுமையாய் இமிசை செய்வான்.

15

அம்முனபிகீன்களாகியஒப்பாசாரக்கள்ளர்களை ஆண்டவன் பரியாசம்பண்ணுவான் மேலும் தங்களின் துன்மார்க்கத்தில் தடுமாறினவர்களாய் இருக்கிற நிலமையில் அவர்களை அத்துன்மார்க்கத்தில் விட்டுவைப்பான்.

இப்னு அப்பாஸ் (ரழி.) அவர்கள் கூறுவதாவது- முனபிகீன்களாகிய ஒப்பாசாரக்கள்ளர்களை இறைவன் பரியாசம் பண்ணும் பொருட்டு சுவர்க்கத்தின் வாசலைத்திறந்து வைக்கப்பட்டிருக்கும்: அப்பொழுது அவர்கள் சுவர்க்கத்தில் நுழைய முயற்சிப்பார்கள். உடனே அவர்களை வெளியில் தள்ளி கதவைச்சாத்தப்படும், அப்பொழுது உண்மை முஸ்லீம்கள் சுவர்க்கத்தின் உயர்ந்த மாளிகையில் உல்லாசமாய் களிப்புற்றுக்கொண்டிருப்பதை முனபிகீன்கள் பார்த்து வருந்திக்கொள்வார்கள். இவ்வுலகில் முனபிகீன்கள் பரியாசம் பண்ணினதற்கு அவ்வுலகில் இறைவன் அவர்களை மேற்கண்டவாறு பரியாசம் பண்ணுவான்.

16

இப்போது சொலியவர்களாகிய துர்ச்செய்கையுள்ள அம்முனபிகீன்கள் சன்மார்க்கத்திற்குப் பதிலாய் துன்மார்க்கத்தை கைக்கொண்டிருக்கிறுர்கள். ஆதலின் அவர்களின் வர்த்தகத்தில் இலாபமில்லே இன்னுமவர்கள் நேர்வழி பெற்றவர்களுமல்ல.

அறிந்துக்கோள்;— அவர்களின் வர்த்தகத்தில் இலாபமில்லே என்று சொன்னதின் கர்த்தாவது வியாபாரத்தின் நோக்கமானது இலாபங் கிடைப்பதுடன் மூலதனமும் சேதமாகாமலிருக்கவேண்டும் அப்படியிருந்தால்தான் ஒருசமையமில்லாவிடில் ஒருசமையம் அம்முதலேக்கொண்டு ஆதாயம் பெறலாம். ஏககாலத்தில் மூலதனமும் ஆதாயமும் போய்விடுவது வியாபாரத்தின் முறையல்ல. இம்முனபிகீன்களாகிய ஒப்பாசாரக் சள்ளர்களோ அவ்விரண்டையும் இழந்துவிட்டார்கள். அஃது எவ்வாறெனில் அவர்கட்கு நற்புத்தியும் நந்நடத்தையும் மூலதனமாயிருந்துவந்தது, அங்ஙனமிருக்க அவர்கள் உண்மைஇஸ்லாம்மதத்தைத் தழுவமறுத்து வழிகேடாகிய துர்நடத்தைகளே நலமென்றெண்ணி நிர்ணயங்கொள்ளவே அவர்கள் மதியீனராகி மோக்ஷவழியைத் தெரிந்துக்கொள்ளக் கூடியகருவியாயிருந்த நற்புத்தி என்னும் முதலில்லாமலாயிற்று ஆகையால் அவர்கள்இலாபமடையவழியில்லாமல் நஷ்டப்பட்டுள்ளவர்களாயினர்.

17

அம்முனபிகீன்களாகிய ஒப்பாசாரக்கள்ளர்களுக்கு உவமையாகிறது. (இருளான இரவில் காட்டில் துஷ்ட மிருகங்களுக்காக அஞ்சி பெருந்) தீ எறித்துக்கொண்டிருந்து அத்தீயானது (நெருப்பு மூட்டி எறித்தவர்க்கு) சூளயிருக்கும் ஸ்தலங்களே ஏகவெ

ளிச்சமாக்கவே! அவர்கட்கு வெளிச்சத்தைக்கொடுத்து இறைவன் ஒளிர்வை நூற்றுக்கண்ணோடு கண் தெரியாத இருளில் விட்டுவிட்டானே அவர்களை போன்றவர்களாயிருக்குர்.

அறிந்துக்கோள்;— விபரமாவது அந்த ஒப்பாசாரக்கள்ளர்கள் உடல், பொருள், ஆவி, இவைகளை இஸ்லாத்துக்காக தியாகஞ்செய்யாமல் தன்னைப் பேணிக்கொண்டு உண்மை முஸ்லீம்களைப்போல் பாசாங்கு செய்துவந்தனர். மேலும் அவர்கள் முஸ்லீம்களிடம் சம்மந்தமும் புரிந்து அவர்களின் சொத்துக்களில் அநந்திரமும் பிறித்து வாங்கி உண்மை முஸ்லீம்களைப்போல் நடித்துவந்தார்கள். அவர்களுக்கு அந்தியகாலம் வந்தவுடன் கலிமாச் சொல்ல நாவு உதவாமல் பயந்தவர்களாயும் இருளில் அகப்பட்டவர்களாயும் இறுதியில் காபிருய் இறந்தார்கள். அவர்களைச் சுட்டி இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

18

அவர்கள் உண்மையைக் கேளாத செவிடர்கள் சத்தியத்தைச் சொல்லாத ஊமையர்கள் அகப்பார்வையில்லாத குருடர்களாயுமாயினர் ஆதலின் அவர்கள் துன்மார்க்கத்தை விட்டும் மீளார்.

19

அல்லது:— அம்முனாபிகீன்களாகிய ஒப்பாசாரக் கள்ளர்களுக்கு உவமையாகிறது, இருளும், மின்னும், இடியும், தங்கி வானத்திலிருந்து வருஷிக்கும் மழையில் சிக்கினவர்கள் போலாயிருக்கும். மழையி லகப்பட்டுக் கொண்டவர்கள் இடியின்

சப்தத்தினுல் தங்களுக்கு அழிவு நேரிடுமென்றஞ்சி காது களில் விரல்களை நுழைத்துக்கொள்வார்கள். அல்லா (ஹ்) வாகி றவன் அறிவாலும் தத்துவத்தினுலும் காபிர்களைச் சூழ்ந்துக்கொண் டிருக்கிறன்.

இதின் விபரமாவது;— நமது திருமறையாகிய குர்ஆன் ஷரீபா னது இறங்கிக்கொண்டிருக்கையில், முனபிகான ஒப்பா சாரக்கள்ளர்கள் மழையிலகப்பட்டுக் கொண்டவர்கள் போலிருந்தார்கள். திரு குர்ஆனில் இருளுக்கொப்பான குப்றுடைய வர்த்தமானமும் இடியைப்போன்ற அச் சம் பூட்டுதலும், மின்னலைப்போலுள்ள தெளிவான அத்தாக்ஷிகளுமுண்டா யிருந்தன. அவைகளைக் காதால்க்கேட்டு ஹிருதயத்தால் உணர்ந்து, கண் ணுல்ப் பார்த்தால் உண்மையான இஸ்லாமென்னும் சன்மார்க்கத்தைத் தழு வும்படி நேரிடுமென்று கருதி, திரு குர்ஆனைக் கேள்க்காமல் காதுகளில் விரற்களை நுழைத்துக்கொள்கிருர்கள். அவர்கள் துன்மார்க்கத்தை விட்டு விலகுவது அவர்கட்கு மரணத்தைப்போலிருந்தது இவற்றிற்காக இவ் வாறு உவமை சொல்லப்பட்டன.

20

மின்னுனது அக்காபிர்களின் பார்வைகளைப்பறித்துக்கொள்ள நெருங்கின்றது. மின்னுனது இருளில் வழியைத் துலக்கும்போ தெல்லாம் அவ்வெளிச்சத்தில் சிலதூரம் அவர்கள் நடப்பார்கள். வெளிச்சம்நீங்கி பாதைமறைந்துவிட்டால் வழிதெரியாமல் நின்ற ஸ்தலத்திலேயே நின்றுவிடுவார்கள். அல்லா நாடினுல் அவர்க ளின் அகப்பார்வையை போக்கினதுபோல் தலையிலிருக்கின்றசெவி யின் கேள்வியையும், கண்பார்வையும், போக்கிவிடுவான். நிச்சய

மாக அல்லா (ஹ்) வாகிறவன் சகல வஸ்துக்களின்பேரிலும் தத்துவமுள்ளவன்.

21

ஆப்! மனிதர்களே! உங்களையும் உங்களுக்கு முன்னுள்ளவர்களையும் சிருஷ்டித்தாபனை ஒன்றுபடுத்துங்கள். நீங்கள் வாசஞ்செய்யும்பொருட்டு பூமியை விரிப்பாயும், வானத்தை முகடாகவும் ஆக்கித் தந்து அவ்வானத்தில் நின்று மழையை வருசிக்கப் பண்ணி அதன் பொருட்டால், உங்கட்கு ஆகாரமாகவும், உங்கள் மிருகங்கட்கு இரையாகவும், பலவித கனிவர்க்கங்களையும் வெளியாக்கித் தந்தானே! அந் நாயனைத் தக்வாச்செய்ய ஒன்றுபடுத்துங்கள். அல்லா (ஹ்) எல்லா வஸ்துக்களையும் சிருஷ்டித்த ஆண்டவனென்று நன்றாய் அறிந்திருக்க அவனுக்கு இணைவையாதேயுங்கள்.

22

ஆப்! (காபிர்) அல்லா (ஹ்) ரஸூலின் கட்டளைகளை மீறினவர்களே! நம்முடைய அடியார் முஹம்து (ஸல்) மீதிலிறக்கிய திருமறையினின்றும் சந்தேகங் கொள்வீர்களேயானால், அதைப் போன்ற ஒரு ஸூறத்தைக் கொண்டுவாருங்கள். அல்லா (ஹ்) அன்றி பூஜிக்கும் உங்கள் தெய்வங்களையும், உதவிக்கு அழைத்துக்

கொள்ளுங்கள். இத்திருமறையை முஹம்மது (ஸல்) தன்மனயுக்தியைக்கொண்டு உண்டாக்கினுரென்று உண்மையாய்ச் சொல்வீர்களானுல் அப்படிச் செய்யுங்கள்.

23

நீங்கள் அப்படிச் செய்யவில்லையானுல் நீங்கள் ஒருபோதும் அவ்வண்ணஞ் செய்யமுடியாது. மனிதரும் கல்லும் விரகாயிருக்கிறதே! அந்த அக்கினியை அஞ்சிக்கொள்ளுங்கள். நாம் இறக்கின திரு குர்ஆனை நிராகரிக்கிறவர்கட்கு அந்த அக்கினியை தயார்செய்து வைத்திருக்கிறேம்.

கவனிப்பு:— இந்த திருவசனத்தின்பிரகாரம் இப்போதே நரகம் படைக்கப்பட்டிருக்கிறதென்று உறுதியாகிறதல்லவா? அப்படியிருக்க முஃதஸிலாக்கள் நரகம் படைக்கப்பட்டிருக்கவில்லை யென்று சொல்வது திரு குர்ஆனுக்கு முற்றும் முரண்பட்டவையா யிருக்கின்றன.

24

ஆய் முஹம்மதே! அல்லா (ஹ்) வைக்கொண்டு ஈமான் கொண்டு இணக்கமான வணக்கஞ்செய்தவர்கட்கு சுபசோபனஞ் சொல்லும். அதன் கீழ் சுனைகள் ஓடும் சுவர்க்கம் அவர்களுக்குண்டென்று சொல்லும். அச்சுவர்க்கத்து கனிவர்க்கங்களில் நின்றும் ஒரு கனியை அவர்களுக்கு ஆகாரமாய்க் கொடுக்கும்தோறெல்லாம் நமக்கு இதுதானே முன் கொடுக்கப்பட்டுள்ளவைகள் என்று சொல்வார்கள். (ஏனெனில் சுவர்க்கத்து கனிவர்க்கங்கள்

ரூபத்தால் எல்லாம் ஒன்றாயும், உருசியால் வெவ்வேறாயுமிருக்கும் அதன் காரணத்தால் அவர்கள் அவ்வண்ணஞ் சொல்வார்கள்.) அந்த ஆகாரத்தையே மீண்டும் அவர்களுக்கு கொடுக்கப்படும். மேலும் அம்மூமினாகிய அச்சந் தீர்ந்தவர்களுக்கு சுவர்க்கத்தில் சகல அசுத்தங்களையும்விட்டும் நீங்கிய மனைவிகளும் அவர்களுக்கு உண்டு. இன்னும் அம் மூமினானவர்களாகிறவர்கள் சுவர்க்கத்தில் ஊழி ஊழிகாலம் உல்லாசமாய் வாழ்ந்திருப்பார்கள்.

அறிந்துக்கோள்:— ஈமானென்னும் உண்மைகொள்வது எல்லா வணக்கங்களுக்கு அஸ்திவாரமாயிருக்கும். ஆண்டவனுக்கு இணக்கமான வணக்கமானது அந்த அஸ்திவாரத்தின்மீதில் கட்டிய கட்டிடமாயிருக்கும் அஸ்திவாரமில்லாத கட்டிடம் பயனற்றது அதுபோல் ஈமான் கொள்ளாமல் செய்யப்படும் வணக்கமானது, பயனற்றது. ஈமான் கொண்டுவிட்டு இணக்கமான வணக்கஞ்செய்யாதிருப்பது அஸ்திவாரம்போட்டுவிட்டு மேற் கட்டிடம்கட்டாமலிருப்பதுபோலாகும். இணக்கமான வணக்கத்தை இறைவன் சுவர்க்கம் புகுத காரணமாக்கியிருக்கிறான். அடியார்கள் ஈமான் கொண்டு சுவர்க்கம் புகுந்தபோதிலும் வணக்கஞ்செய்வது ஈமானின் ஒளிர்வை அதிகப்படுத்தும் மேலும், ஹிருதயமும் வெளிச்சமாகும். சுவர்க்கம் புகுவதற்கு அநேக கஷ்டங்களிருக்கின்றன. அக்கஷ்டங்களனைத்தும் அமலென்னும் வணக்கத்தைக்கொண்டுதான் இலேசாக்கப்படும். ஆதலின் அமல்செய்வது கடமை.

25

நிச்சயமாக அல்லா (ஹ்) வாகிறவன் அணுமாத்திரம் உவமை சொல்லவும் வெட்கப்படமாட்டான். கொசுவு அல்லது ஈ போன்ற

தாயிருந்தாலுஞ்சரி. ஆனால் முஹம்மது (ஸல்) மீதும், திரு குர் ஆன் மீதும் நம்பிக்கை வைத்தவர்கள் இந்தஉவமையானது ஆண்டவனில் நின்றுமுள்ளதென் றுணர்ந்து நாயன் எல்லா வஸ்துக்களையும் உண்டாக்கிற சிருஷ்டிக் கர்த்தாவென்றும் எல்லாம் அவனது தத்துவத்திற்குள்ளடங்கி இருக்கிறதென்றும், அவனைக்கொண்டு உண்மைகொள்வார்கள். இனி காபிரானவர்கள், இத்தாள்மையான உவமைசொல்வதில் இறைவன் என்னபலனை நாடுகிறான். அதினால் என்ன பிரயோஜனமிருக்கிறதென்று கூறுவார்கள். இதைக் கொண்டு காபிர்களில் அநேகரை வழிகெடுப்பான். இன்னம் இதைக்கொண்டு அநேக மூமின்களை நேர்வழிகாட்டுவான். இன்னும் இந்த உவமையைக்கொண்டு அல்லா (ஹ்) வுடைய ஏவல்களுக்குப் பணியாதவர்களைத் தவிர மற்றவர்களை வழி கெடுக்கமாட்டான்.

இந்த ஆயத்து இறங்கினதின் காரணமாவது;— திரு குர்ஆனில் சில (ஆயத்து) திருவசனங்களில் காபிர்களின் சுவாமிகளாகிய தெய்வங்களை ஈக்கும், சிலந்திக்கும் ஒப்பிட்டிருக்கிறான், அதற்கு (முஷ்ரிகீன்) இணை வைத்து வணங்கும் காபிர்கள், அல்லது யூதர்கள் ஆண்டவன் இத்தாழ்ந்த வஸ்துவைக்கொண்டு உவமை கூறுவது அவனுக்குச் சரியில்லையென்று சொன்னார்கள். அதற்காக இந்த ஆயத்து இறங்கிற்று.

2

எப்படிக்கொத்த காபிர்களானால் தன் நாயனுக்குக் கொடுத்துள்ள அர்திமானத்தை யுறுதியாக்கியபின்னர் அதை முறிப்பார்கள். மேலும் நாயன் சேர்ந்து நடக்கச்சொல்லியதை தறிப்பார்கள். மேலும் அவர்கள் பூமியில் தீங்கிழைப்பார்கள். அவர்கள்தான் நஷ்டப்பட்டவர்கள்,

27

ஆப் மக்காவாசிகளே! நீங்கள் என் அல்லா (ஹ்) வைக் கொண்டு காபிராகிறீர்கள். (கர்த்தாவது ஏகதெய்வத்தின் அத்தாட்சிகள் உண்டென்பதை நிரகரிக்கல் நீங்கள் உங்கள் பிதாமுதுகிந்தண்டில் ஜீவனற்ற விந்துகளாயிருந்தீர்கள். பின்பு, உங்கள் மாதாவின் குவளறையிலாக்கி பின்பு ஆவியை ஊதி உங்களை உயிருண்டாக்கினுன். உங்களை மரணமாக்குவான். நீங்கள் மாணித்த பின் உங்களிடம் கேள்விகணக்கு கேட்க மீண்டும் உயிர்த்தெழுப்புவான் உங்களை அவனளவில்தான் மீள்விக்கப்படும். அப்பொழுது உங்கள் கிரிகைகளுக்குத் தகுந்தவாறு கூலிதருவான்.

28

இன்னுமவன் நீங்கள் பிரையோஜனமும், உறுதியும், அடையும்பொருட்டு பூமியையும் அவற்றிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்தான். பூமியைப்படைத்தபின்னர்வானத்தைசிருஷ்டிக்கக்கருதி அதை எழு வானங்களாய்ப் படைத்தான். அல்லா (ஹ்) வாகிற வன் எல்லாவற்றையு மறிந்தவன்.

29

உமது நாயன் மலக்குகளாகிய அமரர்களை நோக்கி எனது அதிகாரத்தைச் செலுத்திவரும்படி பூமியில் ஒரு பிரதிநிதியை நான் ஆக்கப்போகிறேனென்று சொன்னுன். அதற்கு அந்த

அமரர்கள் ஜின்கள் தீங்கிழைத்தவண்ணம் பூமியில் தீங்கிழைத்து அநீதமாய் உதிரங்களை யோட்டும்படியானவர்களையா! சிருஷ்டிக்கப்போகின்றாய்! நாங்கள் உன்னைப் புகழ்ந்தவர்களாயும் தொழுதவர்களாயும், துப்தாக்கிக்கொண்டிருக்கின்றோமேயென்று சொன்னார்கள். நிச்சயமாக நான் நீங்கள் அறியாதவைகளெல்லாம் அறிவேனென்றான்.

நமது ஆதிபிதாவாகிய, ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை சிருஷ்டித்த வரலாற்றின் சாராம்சம், பின்வருமாறு.

ஆண்டவன், வானம், பூமி, அமரர், ஜின் இவைகளைப்படைத்து மலக்குகளாகிய அமரர்களை வானத்திலும், ஜின்களை பூமியிலும், இருந்துவரும்படி கட்டளையிட்டிருந்தான். ஜின்கள் பூமண்டலத்திலிருந்து இறைவனை தவஞ்செய்துக்கொண்டிருந்தார்கள். அப்படியவர்கள் இருந்துவரும்பொழுது தங்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டு பொறாமையும், துஷ்டத்தனமும் அதிகரித்து ஒருவர்க்கொருவர் வெட்டுப்பழியுண்டாகி அனேக அட்டூழியங்கள் புரிந்துவந்தார்கள். இதை யடக்கும்பொருட்டு முன் வானத்து அமரர்களுக்கு அசாசீ லென்னும் இப்லீஸை தலைவனாக்கி பூமிக்கனுப்பினான் அந்த அமரர்களில் இப்லீஸானவன் மஹாமேதாவியாயிருந்தான். இவர்கள் பூமிக்கு விஜயஞ்செய்து அட்டூழியங்கள் புரிந்துக்கொண்டிருந்த ஜின்களை தீவுகளுக்கும், மலையடிவாரத்திற்கும் துரத்திவிட்டு அமரர்கள் தவஞ்செய்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இப்லீஸானவனுக்கு வானம், பூமி, சுவர்கம் இவைகளின் அதிகாரமும் பச்சமரகதத்தினால் இரு சிறகுகளும் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த இறக்கையைக்கொண்டு பறந்துசென்று சிலகாலம் சுவர்கத்திலும், சிலகாலம் வானத்திலும், சிலகாலம் பூமியிலும், தரித்திருந்து தவம்புரிந்துக்கொண்டிருப்பான். அவ்வாறிருந்துவருகையில் இப்லீசுக்கு தர்ப்புகளுண்டாகி நாம் நாயனிடம் எல்லா அமரர்களைவிட மிகவும் மேலானவனாயிருப்பதினால்தான் நமக்கு இந்த உயர்பதவி கிடைத்ததென்று பெருமையை நாடினான். அப்பொழுது இறைவன் அவனையும் அவன் கீழிருந்த அமரர்களையும்நோக்கி நான் பூமியில் என் அதிகாரத்தைச் செலுத்தும்படி கலீபாவாகிய [illegible] பிரதிநிதியை யுண்டாக்கப்போகிறேனென்று சொன்னான்.

இவ்வாறு இறைவன் சொல்லியதை, மலக்குகளாகிய அமரர்கள் கேட்டு நம்முடைய நாயன் தன் இஷ்டம்போல் செய்துக்கொள்ளட்டும் அதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனையில்லை. அவன் எதை சிருஷ்டித்தபோதிலும் நம்மைவிட உத்தமமானவர்களை சிருஷ்டிக்கமாட்டான். அப்படி சிருஷ்டித்தபோதிலும் குற்றமில்லை. நம்மை அப்படைப்பைவிட முதலில் சிருஷ்டித்தபடியாலும், அப்படைப்பு கண்டிராதவைகளை நாம் கண்டிருப்பதாலும், நாம் அவர்களைவிட மிகவும் அறிந்தவர்களென்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

பின்பு ஆதம் (அ'லை) அவர்களை சிருஷ்டிக்கக்கருதி பூமியைநோக்கி உன்னில் நின்றும் ஒருபடைப்பை சிருஷ்டிக்கப்போகிறேன். அவர்களிற் சிலர் எனக்கு வழிபட்டு ஸ்தோத்திரஞ்செய்வார்கள். அவர்களை நான் சுவர்க்கத்தளவிற் சேர்ப்பேன். இன்னும் சிலர் என் ஆக்கினையை மீறி பாவஞ்செய்வார்கள். அவர்களை நரகத்தளவிற் சேர்ப்பேன் என்று சொன்னான். அப்பொழுது பூமியானது தன் நாயனிடம் சுவர்க்கவாதியை என்னில் நின்றும் படைப்பதைப்பற்றி ஆனந்திக்கிறேன். ஆனால் நரகவாதிகளை என்னில் நின்றும் படைப்பதை வெறுக்கிறேன். ஆண்டவனே! என் மீது பரிபூரண கிருபைகூர்ந்து நரகவாதிகளாகிய கொடும்பாவிகளை என்னில் நின்றும் சிருஷ்டிக்காதே! என்று தாழ்மையாய்ச் சொல்லிற்று. இச்சொல்லை ஆண்டவன் ஏற்றுக்கொள்ளாமல் நான் கருதிய காரியத்தைச் செய்தே முடிப்பேனென்றான். இதைக் கேட்டவுடன் பூமியானது தாரை தாரையாய நீர்வடிய அழுதிற்று. அக்கண்ணீரானது பெரும் நதிகளாயோடிற்று.

பின்பு ஜிப்ரீல் (அ'லை) அவர்களை நாயன் நோக்கி பூமியின் நான்கு திசைகளிலிருந்து வெள்ளை, சிகப்பு, கருப்பு முதலிய பலநிறமுள்ள மண்ணெடுத்துவரும்படி உத்திரவுசெய்தான் அதின்படி மண்ணெடுக்க பூமிக்கு வரவே! பூமியானது ஜிப்ரீலே ஆண்டவன்மீது ஆணையிட்டிருக்கிறேன். என்னில்நின்றும் மண்ணெடாதேயுமென்று கூறித் தடுத்துவிட்டது. பின்பு மீக்காயீலும், இஸ்ராபீலும், (அ'லை) ஆண்டவன் உத்திரவின்படி மண்ணெடுக்கவந்தார்கள். இவ்விருவரையும் ஜிப்ரீலைத் தடுத்ததுபோல் தடுத்துவிட்டன. இம்மூவரும் பூமியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு பூமியில் நின்றும் மண்ணெடாமல் திரும்பிவிட்டார்கள். அப்பால் இஸ்ராயீல் (அ'லை) அவர்களுக்கு உத்திரவுசெய்தான்: அதன்படியவர்கள் பூமியில்

மண்ணெடுக்க வந்தார்கள். அவர்களையும் மேற்கண்ட மூவரைத் தடுத்தது போல் தடுக்க அதற்கவர்கள் இணங்காமல் மண்ணெடுத்துக்கொண்டு வந்து விட்டார்கள். அவர்கள் நான்கு திசைகளிலுமிருந்து எடுத்துக்கொண்டு வந்த மண்ணானது பல நிறமுள்ளதாயும், 40 முழம் அகலமுள்ளதாயும் இருந்தது. பலநிறமுள்ள மண்ணைக்கொண்டு ஆதம் (அ'லை) அவர்களை சிருஷ்டித்திருப்பதால் அவர்களின் பிதுர்வாசிகள் பலநிறமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். அம்மண்ணானது சகல மனுக்களுக்கும் மூல பொருளாயிருப்பதினால் மனுஷன் இறந்தபின் அவனை மண்ணில் அடக்கஞ்செய்யப்படுகின்றன. பூமியின் வேண்டுதலுக்கு இஸ்ராயீல் (அ'லை) இணங்காத காரணத்தினால் அவர்களை மனிதன் ஆவியை வாங்கும்படி கட்டளையிடப்பட்டது.

பின்பு அம்மண்ணை திருமக்கமாநகரத்திற்கும் தாயிபுக்குமிடையிலுள்ள வாதி நஃமான் என்னும் வாய்க்காலில் வைக்கும்படி உத்திரவு செய்தான். அதன்படி வைக்கப்பட்டு அதைக் களிமண்ணாக்கி அதைக்கொண்டு ஆதம்(அ'லை) அவர்களுடைய குகையையுண்டாக்கினான். அக்குகையானது மேற்கண்ட இரு ஸ்தலத்திற்குமிடையில் வெகுகாலங்கிடந்து உலர்ந்து வந்தது. அதில் சிலகாலம் சந்தோஷமழையும், வெகுகாலம் துக்கமழையும் பெய்து வந்தது. அதன் நிமித்தம் அவர்களின் பிதுர்வாசிகளுக்கு சந்தோஷத்தைவிட துக்கம் அதிகப்பட்டிருக்கின்றன. அவர்களின் குகையானது அதிக உயரமாய்ப் படைக்கப்பட்டிருந்ததைக்கண்டு அமரர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

ஒருநாள் இப்லீஸானவன் அக்குகையைக்கண்டு இதுஎன்! உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று அதைத் தட்டிப்பார்த்தான். அது போலாயிருந்தபடியால் அதன் வாய் வழியாய் நுழைந்து பின்துவாரத்தின் வழியாய் வெளிவந்து தன் இனத்தார்களாகிய அமரர்களிடம் இதுபோலாயிருப்பதினால் நிலைத்திராது. ஒருசமயம் இது உங்களைவிட மேலானதாகிவிட்டால் நீங்கள் என்னசெய்வீர்களென்று வினவினான். அதற்கவர்கள் நாங்கள் நாயன் கட்டளைக்குப் பணிந்து நடந்துக்கொள்வோமென்று பதிலிறுத்தார்கள். அதற்கவன் அல்லா (ஹ்) வின்மீது ஆணையாக இதுவிஷயத்தில் நான் அவனுக்கு வழிப்படமாட்டேனென்றும், அவர் என்னைவிட மேலானவராகிவிடில் அவரையழித்துவிடுவேனென்று அகங்காரமாய்க் கூறி அக்குகையின்மீது உமிழ்ந்தான். அம்மல்லூனது உமிழ்நீரானது அவர்களின் கொப்பூழ் ஸ்தலத்தில் விழுந்தது. உடனே இறைவன் அந்த உமிழ்நீர்

விழுந்த ஸ்தலத்தை தோண்டிவிடும்படி ஜிப்ரீல் (அ’லை) அவர்கட்கு உத்திரவுசெய்தான். அதன்படியவர்கள் தோண்டி எடுத்துவிட்டார்கள். கொப்பூழானது ஜிப்ரீல் (அ’லை) தோண்டினதிலுள்ளது. அச்சதையிலிருந்து ஆண்டவன் நாயைப்படைத்தான். அதன்நிமித்தம்,நாய்க்கு மனிதனுடைய அறிவு இருந்துவருகிறது.

பின்பு ஆண்டவன் ஆதம் (அ’லை) அவர்கட்கு ஆவியை ஊதக்கருதி அக்குகைக்குள் ஆவியை நுழையச்சொன்னான். அக்குகையானது இருளாயிருப்பதைக்கண்டு அஞ்சி அக்குகைக்குள் நுழைய மறுத்தது. மீண்டும், இருமுறை நுழையச்சொன்னான் அதுமுன்போல் சொல்லிற்று. அப்பொழுது நாயன் ஆவியைநோக்கி வருத்தத்துடனே இதனுட்செல்லு வருத்தத்துடனே வெளியிற் செல்லு என்று சொன்னான். இதன்நிமித்தம் ஆவியானது சரீரத்தில்நின்றும் வெளியாகும்போது வருத்தத்துடனே வெளியாகின்றது ஆவியானது நாயனுக்குப்பணிந்து அக்குகைக்குள் நுழைந்து தலை, நெற்றி, செவி, நாவு இவைகளில் நிறைந்து சரீரத்திலாகி காலுக்கு இறங்கவே! ஆவி வெளிச்செல்ல இடமின்றி மீண்டும் மூக்குத்துவாரத்திற்கு ஏறவே தும்மலுண்டாயிற்று. அப்பொழுது ஆண்டவன் ஆதம் (அ’லை) அவர்களை அல்ஹம்து லில்லாஹி றப்பி’ல் ஆலமீன் என்று சொல்லும்படி சொன்னான். அதன்படி அவர்கள் சொன்னார்கள். நாயன் யர்ஹமு கல்லாஹு என்று பதில் சொல்லிக்கொண்டு ஆதமே! உம்மை நாம் இதற்காகத்தான் சிருஷ்டித்தோமென்று சொன்னான். ஆவியானது முழங்காலுக்கு இறங்கியதும் குதிக்கக்கருதினார்கள். ஆனால், என்றதில்லை. கால்படத்திற்கு வந்தபின் குதித்தார்கள். அப்பொழுது ஆண்டவன் மனிதனை தத்திரப்பட்டவனாய் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னான்.

30

நாயன் ஆதமுக்கு எல்லா வஸ்துக்களின் நாமங்களையும் கற்றுக்கொடுத்தான். பின்பு அவ்வஸ்துக்களை அமரர்களிடமெடுத்துக் காண்பித்து உங்களைவிட அறிவுள்ள படைப்பை நான்படைக்மாட்டேனென்று கூறியவார்த்தையில் உண்மை யுள்ளவர்களா

யிருப்பீர்களானால் இவ்வஸ்துக்களின் நாமங்களைச் சொல்லுங்கள் என்று சொன்னான்.

31

நாயனே! உன்னை தூய்மையாக்கிறோம். நீ எங்களுக்குக் கற்றுத்தந்த அறிவையன்றி வேறு எவ்வகை அறிவும் எங்களுக்கில்லை என்று சொன்னார்கள். உண்மையாக நீதான் எல்லாமறிந்த ஞாயமுடையவன்.

அறிந்துக்கோள்:- மனிதன் அறிவுமுதிர்ந்தவனாயிருந்தபோதிலும் தன்னைத் தாழ்ந்தவனாய்க் கருதிவரவேண்டும். நாயனது அனுக்கிரஹமுண்டாகும்படி எதிர்பார்த்தவனா யிருப்பதோடுதான் அறியாததைப்பற்றிக் கேட்டால் தெரியாதென்று சொல்வதில் வெட்கப்படக்கூடாது.

ஹஜரதுஷாபி இமாம் அவர்கள் கூறுவதாவது:- நீ எவ்வளவு அறிவுள்ள மேதாவியாயிருந்தபோதிலும் நான் அறியேன். என்னும் வார்த்தையை அதிகரித்துக்கொள் அவ்வாறு சொல்வதில் மதிப்பேயன்றி அவமதிப்பல்ல.

32

ஆதமே! நீர் இந்த அமரர்களுக்கு இவ்வஸ்துக்களின் நாமங்களை யறிவிப்புமென்று சொன்னான். ஆதம் (அ'லை) அமரர்களாகிய மலக்குகளுக்கு அவ்வஸ்துக்களின் நாமங்களையும் குணாதிசயங்களையும் விபரமாய் அறிவிக்கவே நாயன் சொன்னான். அமரர்களே நான் உங்கட்குச் சொல்லவில்லையா? நிச்சயமாக நானாகிறவன் வானத்திலும், பூமியிலும் மறைந்திருக்கும் யாவற்றையுமறிவேன்.

இன்னும் பூமியில் துஷ்டத்தனஞ் செய்யக்கூடியவர்களையா! உண்டாக்கப்போகிராய் என்று பஹிரங்கமாய்ச் சொன்னதையும், நம்மைவிட மேலானதை சிருஷ்டிக்கமாட்டானென்று அந்தரங்கமாய்ச் சொன்னதையும் நானறிவேனென்றான்.

33

நாம் அமரர்களைநோக்கி ஆதமுக்கு ஸுஜூது செய்யும்படி சொன்னபோது இப்லீஸைத்தவிர அமரர்களாகிய மலக்குகள் யாவரும் (ஸுஜூது) பணிதல் செய்தார்கள். அவன் ஸுஜூதை விட்டும் விலகி நான் ஆதமைவிட மேலானவனென்று பெருமையடித்தான். மேலும் அவன் காபிர்களில் நின்றுமாய்விட்டான்.

பாயிதா;— ஸுஜூது செய்யும்படி நாயன் ஆக்ஞாபித்தபோது ஜிப்ரீல் (அ'லை) முதலாவது செய்தார்கள். அதனாலவர்களை தீர்க்கதரிசிகளுக்கு வஹ்யி அறிவிக்கும்படியான புனிதமான வேலையைக்கொண்டு சங்கையாக்கப்பட்டது. பின்பு மீக்காயீல், இஸ்ராபீல், இஸ்ராயீல் மற்றும் அமரர்கள் செய்தார்கள்.

34

ஆதமே! நீரும், உம்முடைய மனைவியும் சுவர்க்கத்தில் வாசஞ் செய்யுங்களென்று சொன்னோம். மேலும், சுவர்க்கத்தில்நின்றும் நீங்கள் கருதிய இடத்தில் மனம்போல் தின்னுங்கள் இவ் விருட்சத்தின் அருகில்மட்டும் நெருங்காதேயுங்கள் அப்படி நெருங்கினால் நீங்களிருவரும் மாற்றஞ்செய்தவர்களில் நின்றுமுள்ளவராவீர்கள்.

ஆண்டவன் விலக்கின மரமானது கோதம்பு என்னும் அத்திமரமென்றும், திராக்ஷமரமென்றும் வருகின்றது.

அறிந்துகொள்:— இப்லீசானவன் ஆதம் (அலை) அவர்கட்கு ஸுஜூதுசெய்ய மறுத்தபின் அவனை சுவர்க்கத்தைவிட்டும் வெளிப்படுத்தி ஆதம் (அலை) அவர்கட்கு இவ்வாறு கட்டளையிட்டிருந்தான்.

ரிவாயத்து;— ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்தில் தனித்திருக்கும்போது தனக்குத் துணையாக யிருக்கும்பொருட்டு ஆதம் (அலை) நித்திரை செய்யும் போது அவர்கட்குத் தெரியாமலும், யாதொரு வருத்தமன்றியும் விலாஎலும்பில்நின்றும் ஹவ்வா (அலைஹா) அவர்களை சிருஷ்டித்தான். ஆதம் (அலை) விழித்துப்பார்க்க தலைமாட்டில் அதிக ரூபவதியான ஒரு ஸ்திரீ இருக்கக்கண்டு நீயார் என்று வினவினார்கள். அதற்கு அம்மாது நான் உமது பத்தினி என்றும் நீர் என்மீது சாயவும், நான் உம்மீது சாயவும் ஆண்டவன் என்னைப் படைத்தான் என பதிலிறுத்தார்கள்.

மனுஷனிலிருந்து மனுஷி படைக்கப்பட்டிருப்பதால் தன் தாய்தந்தையைவிட்டும் தன்பத்தினியிடம் அதிக நட்பாயிருக்கிறான்.

35

ஷைத்தானானவன், ஆதமையும், ஹவ்வாவையும், சுவர்க்கத்தைவிட்டும் தூரமாக்கிவிட்டான். ஷைத்தான் அவர்களிருவருமிருந்த உயர் பதவியைவிட்டும் வெளியாக்கிவிட்டான். உங்களிற் சிலர் சிலருக்கு பகைஞர்களாய் இறங்குங்களென்று சொன்னோம். பூமியில் தரிக்கும் ஸ்தலமும், பலன்பெறுவதும், அஜல்தீரு மட்டிலும், உங்களுக்குண்டும்.

பாயிதா பிரயோஜனம்:— ஆதம் [அலை] ஹவ்வா [அலை] இவர்களிருவரும் சுவர்க்கத்தில் அதிக உல்லாசமாய் வாழ்ந்துவரும்பொழுது இப்லீஸ் என்பவனுக்கு பொறாமை ஏற்பட்டு அவர்களைக்கெடுக்கக் கருதி அவர்களிடஞ்செல்ல அதிக சிரத்தையெடுத்தான். அப்போது சுவர்க்கத்து அதிபதிகள் அவனைத் தடுத்துவிட்டனர் பின்பு நான்குகால்களுள்ள மிரு

கம்போன்றுள்ள ஒருசாப்பம் சுவர்க்கத்தில் இப்லீசுக்கு நண்பனுயிருந்து வந்தது. அவன் அந்த சர்ப்பத்தினிடஞ்சென்று, சிநேகிதா! நான் உன் வாயில் நுழைந்துக்கொள்கிறேன். என்னைக் கொண்டுபோய் சுவர்க்கஞ் சேர்த்துவிடு என்று சொன்னான். உடனே சிநேகிதன்மீது சர்ப்பத்திற்கு அன்புண்டாகி அவன் கோரியபடி தன்வாயில் வைத்தானைத் தூக்கிச் சென்று சுவர்க்கத்தில் சேர்த்துவிட்டது.

இப்லீஸானவன் சுவர்க்கஞ் சென்றவுடன், ஆதமும், ஹவ்வாவமிருக்கும் ஸ்தலத்திற்குச் சென்று அவர்கள் மனமுருகும்படி அழுதான். இவன் அழுதுவதைக் கவனித்து அப்பா! நீ என் இவ்வளவு கவலையுடன் அழுகிறாய் என்று வினவினார்கள். அதற்கு அவன் நீங்கள் மரணமாகிவிட்டால் இச் செல்வம் உங்களுக்குக் கிடையாதென கவலையுடன் அழுகிறேனென்று பதிலிறுத்தான். இவ்வாறு கூறியதைக்கேட்டு அவர்களுக்கு சற்று கவலையுண்டாயிற்று. இதெற்கென்ன பரிகாரஞ்செய்கிறதென்று தங்களுக்குள் புரியாமலிருந்தது. சிலகாலஞ்சென்றபின் மீண்டும் இப்லீஸ் அவர்களிடம் வந்தான். அப்பொழுதவர்கள் நாங்கள் இறக்காமலிருப்பதற்கு என்னவழிசெய்யலாமென்று கேட்டார்கள். அதற்கவன், ஆண்டவன்மீது சத்தியஞ்செய்து இதோ நிற்கின்ற மரத்தின் கனியைப் புசித்தால் நீங்கள் நித்தியஜீவனுயிருப்பீர்கள். உங்கட்கு மரணமே கிடையாதென்று அவர்கள் உங்கட்கு மனதில் நன்றாய்ப் பதியும்படி போதனைசெய்தான்.

அதையவர்கள் சரியென்று ஒப்புக்கொண்டு ஆண்டவன்மீது ஒருவன் பொய்சத்தியஞ் செய்யமாட்டானென்று நம்பி வைத்தான் காண்பித்துக் கொடுத்த மரத்திலின்றும் ஹவ்வா [அ'லைஹ] பழத்தைப் பறித்து தானும் புசித்துவிட்டு தன் பர்த்தாவுக்கும் கொடுத்தார்கள். இருவரும் புசிக்கவே! ஆ! ஆதமே! நான் உமக்குத் தந்திருக்கிற அருள்கொடையில் இம்மரத்தின் கனியைமட்டும் புசிக்கவேண்டாமென்று விலக்கியிருக்க என்! புசித்தீரென்று வினவினான். அதற்கவர்கள், ஆண்டவனே! உன்மீது ஒருவன் பொய் சத்தியம் பண்ணுவானென்று நான் கருதவில்லை, என பதிலிறுத்தார்கள். என் ஆணை நான் உம்மை பூமிலிறக்குவேன் அப்பொழுது நீர் வருத்தப்பட்டே காலக்ஷேபங்களிப்பீரென்று சொன்னான்.

ஹவ்வா (அ, லைஹ,) செய்ததவறுத்தலுக்காக பிரசவகாலங்களில் வேதனையும், மாதந்தோறும் தீட்டையும் கொடுப்பேனென்றுஇறைவன் சொல்

லவே! ஹவ்வா (அலை) மூணங்கிறார்கள். அப்பொழுது உனக்கும், உன் பெண் மக்களுக்கும், இதேமாதிரி மூணக்கமுண்டென்று சொன்னான்.

ஆதம் (அலை) கனியைப்புசித்தவுடன் வஸ்திரம் களைந்து மலம், ஜல மூண்டாகி அதைவெளியாக்க சுவர்க்கத்தில் இடந்தேடி சுத்தித்திரிந்தார்கள். அப்பொழுது நாயன் ஒரு மலக்கையனுப்பி ஆதம் என் சுத்தித்திரிகிறரென்று கேள்க்கச்சொன்னான். அந்தின்பிரகாரம் கேட்கப்பட்டதற்கு என்வயற்றிலிருப்பதைக்கழிக்க இடந்தேடுகிறேனென்று பதிலிறுத்தார்கள். அப்பொழுது அம்மலக்கானவர், மலம், ஜலம் கழிககக்கூடிய இடம் சுவர்க்கத்தில் கிடையாது. பூலோகததிற்குச்செல்லு மென்று சொன்னார்கள், இவ்வார்த்தையைக்கேட்டதும் துக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

ஆதம் (அலை) பூலோகத்திலிறங்கிய விபரம்:- இந்தியாவிற்கு சமீபத்திலுள்ள இலங்கை தீவிலுள்ள ஓர் மலையில் ஆதம் (அலை) அவர்களை இறக்கப்பட்டது, தாங்கள் இறங்கும்போது தங்களிடம் சுவர்க்கத்தின் சுகந்தவாசனையுண்டாயிருந்தது. அதின் காரணத்தால் அம்மலைக்கருகிலுள்ள விருக்ஷங்களில் அவ்வாசனையுண்டாயிருந்தது. ஹவ்வாவை(அலைஹ,) ஜித்தாவில் இறக்கப்பட்டது. இருவரும்வெகுதூரத்திற்கிடையிலிருந்தார்கள். இப்லீஸை அய்லாவென்னும் நகரத்திலும் சர்ப்பத்தை இஸ்பஹான் என்னும் நகரத்திலும் இறக்கப்பட்டது. இவர்களனைவரும் பரலோகத்தில் அதிக உல்லாசமாய் வாழ்ந்துக்கொண்டிருந்தார்கள்.

ஆதம் (அலை) அவர்களை விவசாயஞ்செய்து காலங்களிக்கும்படியாயும், ஹவ்வா(அலைஹ) அவர்களை நீட்டைக்கொண்டும், தாழ்மைப்படுத்தப்பட்டது. பாம்பானது காலால் நடந்துக்கொண்டிருந்ததை மாற்றி வயிற்றால் நகர்ந்து செல்லும்படி செய்யப்பட்டது. இப்லீஸை பன்றியாய் ரூபமாற்றப்பட்டது.

ரிவாயத்து:- பாம்பானது சுவர்க்கததில் ஆதம் (அலை) அவர்களுக்கு பணிவிடை செய்துக்கொணடிருந்தது, இப்லீஸுடன் சேர்ந்து ஆதம் (அலை) அவர்களை வஞ்சித்ததினால் ஆதமுடைய மக்களுக்கும், சர்ப்பத்திற்கும் தீராப்பகையுண்டாயிற்று. ஒருவன் சர்ப்பததின் தலையைக்கண்டவுடன் அதை நசுக்குவான். பாம்பானது தன்னைக்கொல்லுவானென்று கருதி அவனைத்தீண்டும்.

36

ஆதம் தன்னுடைய நாயனில் நின்றும் சில சொற்களைக் கற்றுக்கொண்டார் (கர்த்தாவது நாயன் அவருக்கு உதிப்புண்டாக்கினான்) நாயன் அவரது தௌபாவை ஏற்று அவரது பிழையை மன்னித்தான் நிச்சயமாக அல்லா(ஹ்) வாகிறவன் மிகவும் மன்னிக்கிறவனும் கருணைபுரிகிறவனுமே.

ஆதம் (அ'லை)அவர்கட்கு ரப்பனா ளலம்னா என்னும் இந்த ஆயத்தை இறுதி வரையும் உதயமாக்கினான் இதன் அர்த்தமாவது, நாங்கள் எங்கள் ஆன்மாக்களை அநியாயஞ்செய்துக்கொண்டோம். நீ எங்கள் குற்றங்களை மன்னித்து கிருபைசெய்யவில்லையானால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் நின்று முள்ளவர்களாயிடுவோம் என்பதே. இதை யோதினவர்களாய் ஸ்தோத்திரஞ் செய்தார்கள். நாயன் அவர்களின் பிரார்த்தனையை ஒப்புக்கொண்டு அவர்களை மன்னித்தான்.

37

நீங்களனைவரும் சுவர்க்கத்தை விட்டும் இறங்குங்கள் உங்களிடம் என்னில் நின்றும் வேதமும் அதற்குரிய தீர்க்கதரிசியும் வருவார்கள் அவர்களை எவர் பின்பற்றுவார்களோ அவர்கள் மீதில் இருலோகத்திலும் அச்சமில்லை. இன்னவமர்கள் சஞ்சலமடையவுமாட்டார்கள் என கூறினோம்.

38

நாமனுப்பி வைத்துள்ள தீர்க்கதரிசிகளை அங்கீகரிக்காமலும் நம் திரு வசனங்களை பொய்யாக்கியவர்களே நரகவாதிகள் அவர்கள் அந்நரகத்தில் சதாகாலமும் தரிபடுவார்கள் அதில் மரணமுங் கிடையாது மீட்சியுமில்லை.

39

இஸ்ரவேலின்மக்களே! உங்கள்பிதாக்களுக்குக்கொடுத்திருக்கும் அருள் கொடையை நன்ருய் நினைத்துப்பாருங்கள் இன்னும் எனது வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்றுங்கள் நான்,உங்களைச் சுவர்க்கஞ் சேர்ப்பதாய் வாக்களித்ததை நிறைவேற்றுகிறேன் மேலும் என்னையே பயந்துக்கொள்ளுங்கள்.

அறிந்துக்கோள்:- இஸ்ரவேலர்களின் பிதாக்களுக்கு நாயன் செய்துள்ள உபகாரமாவது பிர்ஔன் அக்கிருமஆட்சி புரிந்து வந்த காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களை விட்டும் காப்பாற்றினதும், கடலைப்பிளந்ததும், மேகத்தை நிழலிடச்செய்ததும் இன்னமிதுபோன்றவைகளாயிருக்கும்.

ஆண்டவனின் வாக்குறுதியை நிறைவேற்றுங்களென்று சொன்னதின் கர்த்தாவது. இறுதி நபியாகிய முஹம்மது(ஸல்) அவர்களைக்கொண்டு உண்மை கொள்ளும்படி நாயன் கூறியதாயிருக்கும்.

40

இன்னும் உங்களிடமிருக்கிற தௌராது வேதத்தையுண்மையாக்கிய முஹம்மது(ஸல்) மீதில் நானிறக்கிய குர்ஆனைக்கொண்டு ஈமான் கொள்ளுங்கள் அக்குர்ஆன் வேதத்தை அநுஷ்டியாமல் காபிராப்போனவர்களில் முதன்மையானவர்களாயிடவேண்டாம் மேலும் முஹம்மது(ஸல்) அவர்களின் வர்ணிப்புகளில் நின்றும் உங்களுடைய தௌராதிலிருக்கிற எனது வசனங்களை சொற்ப விலைக்கு விற்கவேண்டாம் இது விஷயத்தில் எனக்குப் பயப்படுங்கள்.

அறிந்துக்கோள்:- இந்த திருவசனமானது யூதர்களின் வேதசாஸ்திரிகளாகிய கஃபுப்னு அஷ்ரபு முதலியவர்களின் மீதில் இறங்கிற்று இதின் விபரமாவது யூதர்களின் மேதாவிகளுக்கு 'தங்களுக்குக் கீழ்ப்படிந்துள்ள பாமரஜனங்கள் தங்களின் தலைவர்களாகிய வேதசாஸ்திரிகள் மஹான்களென்று கருதி அவர்கள்மீது விசுவாசம் வைத்து அவர்கட்கு வருடந்தோறும் திரவியங்களும், ஆடு, மாடு முதலிய கால்நடைகளும், காணிக்கையாய் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். நபிபெருமானவர்களின் வர்ணிப்புகளை வெளியிட்டால் அப்பாமரஜனங்கள் சன்மார்க்கமென்னும் இஸ்லாமதத்தை தழுவி தங்களுக்குக் கிடைத்துவரும் வரும்படியானது நின்றுவிடுமென்றெண்ணி முஹம்மது(ஸல்)அவர்களின் வர்ணிப்புகளை பிரட்டினதோடு அவர்களின் திருநாமத்தையும் மறைத்து விட்டார்கள்,

41

நீங்கள் மெய்யை பொய்யோடு கலக்காதேயுங்கள் மேலும் உண்மையை மறையாதேயுங்கள். முஹம்மது உண்மை தீர்க்க

தரிசி என்றறிந்திருந்தும் அவரது வர்ணிப்புகளை மறையாதேயுங்கள்.

அறிந்துக்கோள்:- இந்த ஆயத்தானது யூதர்களின் மீதில் இறங்கிற்று.

42

ஆய் யூதர்களே! நீங்கள் தொழுகையை கடமையென்று ஒப்புக்கொண்டு முஸ்லீம்களைப்போல் தொழுகையை நிலைப்படுத்துங்கள். மேலும் அவர்களைப்போல் ஸகாதுங்கொடுங்கள். மேலும் ருகூவு செய்யும் ஜமாஅத்துடன் கூடி நீங்களும் ருகூவு செய்யுங்கள்.

அறிந்துக்கோள்:- முதலில் தொழுவுங்களென்று கூறிவிட்டு பின்பு ருகூவு செய்யுங்களென்று சொன்னதின் கர்த்தாவது, யூதர்களின் தொழுகையில் ருகூவு கிடையாது அதற்காக ருகூவுடைய தொழுகையாகிய முஸ்லீம்களின் தொழுகையைப்போல் தொழுங்களென்று சொல்லப்பட்டது.

43

ஆய் யூதர்களே! முஹம்மது(ஸல்) அவர்களின் வர்ணிப்புகளை யெடுத்து கூறியிருக்கின்ற தௌராது திருமறையை நீங்கள் நன்றாயோதிருக்க உங்கள் ஆன்மாக்களை மறந்துவிட்டு இதா மனிதரை நன்றியைக்கொண்டு ஏவல் புரிகிறீர்களா? உங்கள் ஆன்மாக்களைத் திருத்தாமல் பிறருடைய விஷயத்தைக் கவனிக்கிறது மிகக்கெட்ட விஷயமென்று ஆலோசிக்கத்தகுந்த புத்தி உங்களுக்கில்லையா?

அறிந்துக்கோள்:— இந்த ஆயத்தானது யூதர்களின் வேதசாஸ்திரிகள் மீதில் இறங்கிற்று. விபரமாவது, சுயாலங்கருதிய யூதர்களின் வேத சாஸ்திரிகளிடம் தங்கள் பந்துக்களில் பிரதிபிரயோஜனமடைய வழியில்லாத ஏழை முஸ்லீம்கள் நம் நபிபெருமானவர்களின் மகத்துவங்களைக் குறித்து கேட்கும்போது முஹம்மது(ஸல்) அவர்கள் உண்மையானவரென்றும் அவருக்கு இறங்கியிருக்கும் தெய்வத்திருமறை சத்தியமானதென்றும், அவர் மதத்தையே நீங்கள் பின்பற்றியிருங்களென்றும் சொல்வார்கள். இன்னமவர்களில் தனவந்தர்கள் நம் நபிபெருமானவர்களின் வர்ணிப்புகளைப்பற்றி கேட்கும் போது அவர் நம்முடைய வேதத்தில் கூறப்பட்டுள்ளவரல்லவென்று சொல்வதோடு தாங்களும் இஸ்லாமதத்தைத் தழுவமாட்டார்கள்.

44

ஆய் மனிதர்களே! உங்கள் எண்ணம் நிறைவேறும் பொருட்டு தொழுகையைக்கொண்டும், பொறுமையைக்கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக இதுவாகிறது கியாம நாளில் நாம் நாயனைச்சந்திப்போம் நிச்சயமாய் அவனளவில் மீள்வோம். அவன் நம் வணக்கத்துக்கேற்ற கூலிதருவானென்று நிர்ணயங்கொண்ட உள்ளச்சமுடையவர்களுக்கே தவிர மற்றவர்களுக்கு மிக்க கனமானதாயிருக்கும்.

ரிவாயத்து:— நம் நபிபெருமானவர்கட்கு சஞ்சலம் நேரிட்டால் உடனே தொழுகையளவிற் செல்வார்கள்.

45

ஆய் இஸ்ரவேலின் மக்களே! நான் உங்களுக்குக் கொடுத்த அருள் கொடையையும், உங்கள் பிதாக்களை அக்காலத்தினர்களை

விட நான் அதிக வலுப்பமாக்கினதையும் நினைத்துப்பார்த்து என் மீது நன்றி பாராட்டுங்கள்.

46

மூமினான ஆன்மா காபிரான ஆன்மாவில் நின்றும் யாதொரு வஸ்துவையும் தேள்வைப்படாதே அந்நாளாகிய இறுதி நாளைக் கொண்டு பயப்படுங்கள். மேலும் அஃது எந்த நாளானால் அந்நாளில் மூமினான (அச்சந்தீர்ந்தவன்) ஆன்மா காபிரான (ஆண்டவன் ஏவலுக்கு பணியாதவன்) ஆன்மாவுக்கு பரிந்து பேசுவதில் நின்றும் அஃது அங்கீகரிக்கப்படமாட்டாது மேலும் அக்காபிரான ஆன்மாவில் நின்றும் பதில் பரிகாரத்தை ஏற்றுக்கொண்டு அதை விடுவிக்கப்படவுமாட்டாது மேலும் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யப்படவுமாட்டாது.

47

மேலும் நினைத்துப்பாருங்கள் உங்கள் பிதாக்களை பிர்ஔன் கூட்டத்தாரை விட்டும் காப்பாற்றினோம், அவர்கள் உங்களை கொடுந்துன்பஞ் செய்தார்கள். உங்கள் ஆண் சிசுக்களை அறுத்தார்கள் பெண் சிசுக்களை உயிருடன் விட்டாரகள். இப்பொழுது கூறப்பட்டுள்ளவற்றில் உங்களின் நாயனில் நின்றும் வலுப்பமான சோதிப்புண்டாயிருக்கின்றன.

48

ஆய் யூதர்களே! உங்கட்காக நாம் சமுத்திரத்தைப்பிளந்து உங்களை பிர்ஔன் கூட்டத்தை விட்டும் ஈடேற்றமாக்கினேம். நீங்கள் பார்த்திருக்க பிர்ஔனையும் அவன் கூட்டத்தாரையும் சமுத்திரத்தில் மூழ்கடித்தோம்.

49

நாம் மூஸாவுக்கு 40இரவுகளைவாக்களித்தோம். பின்பு மூஸா வசனிக்க வந்த பிறகு நீங்கள் காளைமாட்டை தெய்வமாக்கிக் கொண்டீர்கள். நீங்கள் இதை வைத்து வணங்கி உங்கள் ஆன் மாக்களை அநியாயஞ் செய்துக்கொண்டீர்கள்.

அறிந்துக்கோள்:- மூஸா என்னும் நாமத்திற்கு அர்த்தமாவது. அப்ரானி பாஷையில் மூ என்றால் ஜலம், ஸா வென்றால் மரம். மூஸாநபியவர்கள் ஜனனமானவுடன் பிர்ஔனுக்குப் பயந்து தங்கள் தாயார் ஒரு மரப்பெட்டியிலடைத்து ஜலத்திலெறிந்துவிட்டார்கள். அப்பெட்டியானது பிர்ஔனுடைய வீட்டிற்குச்சமீபத்தில் ஜலத்திற்குள் நின்ற மரத்தடியில் வந்து சேர்ந்தது ஆதலின் ஜலமும் மாமுங்கூடிய அர்த்தத்துடன் மூஸா வென்றழைக்கப்பட்டது.

50

பின்பு நீங்கள் காளைமாட்டை தெய்வமாக்கிக்கொண்டபிறகு நாம் உங்களைத் தொட்டும் பாவத்தைப் பொறுத்தோம் நாம் உங்களுக்குப் புரிந்துள்ள நன்மைக்கு நீங்கள் நன்றி பாராட்டுவதற்காக.

51

மேலும் உண்மைக்கும் பொய்க்குமிடையில் பிறிக்கிறதையும் தௌராத்தையும் நாம் மூஸாவுக்குக் கொடுத்தோம் நீங்கள் அவ் வேதத்தைக்கொண்டு மோக்ஷமடைவதற்காக.

52

மூஸா தம்முடைய கூட்டத்தார்களுக்குச் சொன்னார் என்று கூட்டத்தார்களே! நிச்சயமாக நீங்களாகிறவர்கள் காளைமாட்டைத் தெய்வமாக்கிக்கொண்ட காரணத்தால் உங்கள் ஆன்மாக்களை நீங்கள் அநியாயஞ் செய்துக்கொண்டீர்கள் ஆதலின் நீங்கள் உங்களை சிருஷ்டித்த நாயனிடம் மன்னிப்புத்தேடிக்கொள்ளுங்கள் அதாவது உங்கள் உங்கள் ஆன்மாக்களை வெட்டிக்கொள்ளுங்கள். அப்படி நீங்கள் வெட்டிக்கொள்கின்றது உங்களை சிருஷ்டித்த நாயன் சந்நிதானத்தில் மிகவும் கண்ணியமாயிருக்கும் உங்கள் நாயன் நீங்கள் மன்னிப்புத்தேடியதை ஒப்புக்கொண்டான் நிச்சயமாக அவன்தான் மன்னிப்புகளை அங்கீகரிக்கும் கருணையுள்ளவன்.

கவனிப்பு:- இஸ்ரவேலர்களுக்கு வெட்டிக்கொள்வதுதான் தௌபாவென்னும் மன்னிப்பாயிருந்தது.

53

ஆய் இஸ்ரவேலின் மக்களே! மேலும் சொன்னீர்கள். மூஸாவே! நாங்கள் அல்லா(ஹ்)வை பிரத்தியக்ஷமாய்க்கண்டாலொழிய உம்மைக்கொண்டு ஈமான் கொள்ளமாட்டோமென்றீர்கள் நீங்கள் பார்த்திருக்க உங்களை நிடுக்கமான சப்தம் தொட்டது.

இதின் விபரமாவது:- இஸ்ரயேலர்களில் மாட்டை தெய்வமென்று வணங்கியவர்களுக்கு மன்னிப்பளிக்கும் பொருட்டு சில பேர்களுடன் தூர்சீனா மலைக்கு மூஸா(அ'லை) அவர்களை வரும்படி இறைவன் உத்திரவு செய்தான். அதின்படியவர்கள் தங்கள் கூட்டங்களில் 70 பேர்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு மலைக்குச்சென்றார்கள். அக்கூட்டங்கள் நாங்களும் இறைவனது திருவசனத்தைக் காதால் கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் விருப்பப்படி இறைவனும் உத்திரவு கொடுத்தான். பின்பு மூஸா(அ'லை) அவர்களும் அவர்களின் கூட்டத்தாரளும் மலையினருகிற் செல்லவே மேகத்தில் நின்றும் ஒரு தூண்போலிறங்கி மலையை மூடிக்கொண்டது. தங்கள் கூட்டத்தார்களுடன் அதனுள் புகுந்தார்கள். அப்பொழுது மூஸா(அ'லை) அவர்கள்; ஆண்டவனிடம் வசனித்தார்கள். தங்கள் கூடவந்தவர்களும், இறைவனின் திருவசனத்தைக் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். ஆண்டவனது திருவசனம் வெளியாகும்போதெல்லாம் அவர்கள் மீதில் ஒளிர்வுபற்றிப் பாய்ந்துக்கொண்டிருந்தது இதுமட்டில் நிற்காமல் நாங்கள் இறைவனை பிரத்தியக்ஷமாய் காணவேண்டுமென்று அப்பேதைக்கூட்டத்தார்கள் மடத்தனமாய்ச்சொன்னார்கள். அவர்கள் அப்படிச்சொல்லவே ஆண்டவனுக்கு சினமுண்டாகி உடனே அவர்கள் மீதில் அக்கினி பற்றிப்பிடித்து அவைய சப்தத்துடன் மரணமாகி ஒரு நாள் வரையும் அப்படியே கிடந்தார்கள்.

54

பின்பு நீங்கள் இறந்தபிறகு நாம் உங்களை உயிருடன் எழுப்பினோம் நீங்கள் நம்மை நன்றி பாராட்டுவதற்காக.

55

இன்னும் உங்களை சூரியனுடைய உஷ்ணத்தை மேகத்தைக் கொண்டு மறைத்தோம் மேலும், அக்காட்டில் நாம் தூரஞ்சபீன் என்னும் பழத்தையும், ஸல்வாஎன்னும் பட்சியையும் உங்கள் மீதிலிறக்கினோம். மேலும் உங்களுக்குக் கொடுத்துள்ள மணமான பழத்தில் நின்றும், பட்சியில் நின்றும் புசித்துக்கொள்ளுங்கள் (மறுவேளைக்கென்று அதில் நின்றும் தங்கரியப்படுத்தாதையுங்கள் அவர்கள் தங்கரியஞ்செல்லாதகாரணத்தால் மீண்டும்பட்சியும் பழமும் வருவது நின்றதுமன்றி பத்திரப்படுத்தியதும் புழுத்துப் போயிற்று.) அவர்கள் இவ்வேலை செய்துகொண்டது நம்மை நஷ்டப்படுத்தவில்லை எனினும் அவர்கள் தங்கள் ஆன்மாக்களைத் தான் நஷ்டப்படுத்திக்கொண்டார்கள்.

இந்த ஆயத்து இறங்கியதின் விபரமாவது.

ஒரு நாட்டில் துஷ்டர்கள் பல அக்கிருமங்கள் புரிந்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை அடக்கும் பொருட்டு மூஸா(அலை) அவர்கட்கு ஆண்டவன் உத்திரவு செய்தான் இறைவனது உத்திரவுக்கிணங்கி தம்முடைய கூட்டங்களுடன் அவ்வூருக்குச் சென்றார்கள். அவ்வூர் மனிதர்கள் அதிக உயரமுள்ள தீர்கனென்று கேள்வியுற்று மூஸா(அலை) அவர்களிடம் நாங்

கள் இங்கிருக்கிறோம் நீரும் உம்முடைய நாயனும் அவர்களிடம் யுத்தஞ் செய்யுமென்று தங்களைப்பயந்துக்கொண்டு சொன்னார்கள். அவ்வூர் அதிபதியைக் கண்டுபிடிக்கமுடியாமல் வெகு நாள் வரையும் சுத்தித்திரிந் தார்கள். அக்காட்டில் அவர்களுக்கு வேலையின் கடூரத்தால் பசியும், தாகமும் மேலிட்டு தங்கள் நபியிடம் முறையிட்டார்கள். அப்பொழுது மூஸா (அலை) அவர்கள் இதைக்குறித்து நாயனிடம் வினவியதில் அப்பொழுது இறைவன் அவர்கட்கு அக்கஷ்டம் நிவாரணமாகும் பொருட்டு இருளில் நடந்து செல்வதற்காக வானத்தில் நின்று ஒரு ஒளிர்வையும், பகலில் சூரியன் உஷ்ணத்தைத்தணிக்க ஆர்வித மேகத்தையும், உணவுக்காக ஸல்வா என்னும் பட்சியும், துரஞ்சபீன் என்னும் பழத்தையும் கொடுத்தான்.

56

ஆய் இஸ்ரவேலின் மக்களே! உங்கள் பிதாக்கள் வனாந்திரத் தில் சுற்றித்திரிந்த பின்னர் அவர்களுக்கு நாம் சொன்னோம் இந்த பைத்துல்முகத்திஸ் என்னும் ஜெருசலம் நகரத்துக்குள் நுழையுங்கள். அதில் நுழைந்து நீங்கள் நாடிய ஸ்தலத்திலெல்லாம் மனம்போல் தின்னுங்கள் பணிந்தவர்களாய் அந்நகரத்தின் வாசலில் நுழையுங்கள். மேலும் எங்கள் குற்றங்களை மன்னிப்பாயாக வென்று சொல்லுங்கள். அவ்வண்ணம் நீங்கள் கூறினால் நாம் உங்கள் குற்றங்களை மன்னிப்போம் அழகான வேலை செய்த வர்கட்குப் பின்னால் நாம் நன்மைகளை அதிகமாய்க்கொடுப்போம்.

57

ஆனபோதே தங்களுக்குச் சொல்லப்பட்டுள்ள சொல்லைப்

பிறட்டிக்கூறி தங்கள் ஆன்மாக்களை அநியாயஞ் செய்துக்கொண்டனர்ஆதலின் அநியாயத்தைக் கைக்கொண்டார்களே அவர்கள் மீதில் நம் வானத்தில் நின்றும் அதாபென்னும்ஹிம்சையையிறக்கினேம். அவர்கள் சன்மார்க்கத்தில் நின்றும் நீங்கிப்போகிறவர்களாயிருந்த காரணத்தால்.

ரிவாயத்து:- ஆண்டவனது சொல்லுக்கு வழிப்படாத மேற்கண்டவர்களுக்கு விஷபேதியையனுப்பி அவர்களில் நின்றும் எழுபதினாயிரம் பேர்களை சிலமணி நேரத்தில் மரணமாக்கப்பட்டது.

58

மூஸா காட்டிலிருக்கும் சமையம் தம்முடைய கூட்டத்தினர்களுக்கு ஜலம் புகட்டத்தேடினார். நாம் அவருக்கு உமது அஸாவாகிய ஊன்றுகோலைக்கொண்டு அக்கல்லின் மீது அடியுமென்று சொன்னேம். அதின்படி மூஸா அடிக்கவே? அதில் நின்றும் பன்னிரண்டு ஊற்றுக்கள் ஒலித்தது. நிச்சயமாக எல்லா மனிதர்களும் தாங்கள் பருகும் ஸ்தலத்தை அறிந்துகொண்டார்கள். இறைவன் உங்களுக்குக் கொடுத்துள்ள மன்னுஸல்வா என்னும் ஆகாரத்தை தின்னுங்கள். இந்த ஜலத்தில் நின்றுங்குடியுங்கள். நீங்கள் பூமியில் தீங்கு செய்யாதீர்களென்று அவர்களுக்குச் சொன்னேம்.

ரிவாயத்து:- எஃகூபு(அ'லை) அவர்கட்கு 12 புத்திரர்களிருந்தார்கள் அப்பன்னிருவர்களின் சந்ததியார்களும் மூஸா(அலை) அவர்கள் கூடயிருந்தார்கள். அவர்கள் ஒருவரைவிட்டொருவர் பிறிந்து சம்பந்தம் முதலானதுகள் தங்கள் தங்கள் இனத்துக்குள்ளேயே செய்துககொண்டு ஒருவரோடொருவர் கலக்காமல் வெவ்வேறாயிருந்தார்கள். அந்த ஜலத்தால் ஒருவ

ருக்கொருவர் தாவாச் செய்துகொள்ளாமலிருக்கும் பொருட்டு அவரவர்களும், அவரவர்களின் மிருகங்களும், அத்தண்ணீரை உபயோகித்துக் கொள்ளும்படி அக்கல்லில் நின்றும் பன்னிரண்டு கண்களான அருவிகள் உண்டாயிற்று அதை ஏராளமான ஜனங்கள் உபயோகித்துவந்தாகள்.

59

பின்னும் மூஸாவே! நாங்கள் ஒரே ஆகாரத்தின் மீது பொறுமை செய்யமாட்டோம் ஆதலின் எங்களுக்காக பூமி முளைப்பிக்கக்கூடிய கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, மசூர் பருப்பு, வெங்காயம்முதலியவைகளை வெளிப்படுத்தித்தரும்படி உமதுநாயனிடம் கேளும் என சொன்னீர்கள். அதற்கு மேலான வஸ்துக்களுக்கு கீழான வஸ்துவையா பகரமாக்கத்தேடுகிறீர்கள் அப்படியாயின் எந்த நகரத்திற்காவது செல்லுங்கள்நீங்கள் கேட்டவைகள் அங்கு உண்டென்று மூஸா சொன்னார். பின்னர் அவர்கள் மீதில் தள்மையும், எழுமையும் விதிக்கப்பட்டன, மேலும் இறைவனில் நின்றும் சினத்தைக்கொண்டு மீண்டார்கள் மேற்கூறியவைகள் ஆண்டவனது திருவசனங்களை அவர்கள் நிராகரித்தும் தீர்க்கதரிசிகளை அநீதியாய்க்கொலைசெய்தும் எவனுக்குமாறுசெய்து வரம்பு கடந்த காரணத்தினால் அவர்களுக்கு ஏற்பட்டன.

ரிவாயத்து:- எவனொருவன் இலேசான வணக்கஞ்செய்துக்கொண்டு வருவானாகில் அந்த இலேசான வணக்கமானத் இறுதியில் அது மேலான வணக்கங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கும். எவனொருவன் சிறு பாவங்

கள் செய்துக்கொண்டு வருவானாகில் அது முடிவில் பெரும் பாவத்தளவில் கொண்டுபோய்ச் சேர்க்கும். மேலும் மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ள ஒரு சிறிய காரியத்தைச் செய்வானாகில் அதுகுப்ருக்கு தூதுவாயிருக்குமென்று ஹதீதில் வந்திருக்கின்றது.

60

நிச்சயமாக அந்தரங்க சுத்தியில்லாமல் வாயினால் ஈமான் கொண்ட முனாபிகீன்களும், யூதர்களும், கிறிஸ்தவர்களும், இவர்களின் மதத்தை விட்டும் விலகி நட்சத்திரங்களையும், அமரர்களையும் தெய்வமென்று வணங்கியகாபிர்களும் இவர்களில் நின்றும் இறைவனைக்கொண்டும், சகலதீர்க்கதரிசிகளுக்குமிறங்கிய வேதங்களைக் கொண்டும், இறுதிநாளைக்கொண்டும் ஈமான் கொண்டு முஸ்லிமாகி நாயனுக்கு இணக்கமானவணக்கஞ் செய்தவர்களுக்கு நாயனில் நினறும் கூலியுண்டும். அவ்வுலகில் காபிர்கள் அஞ்சக்கூடிய பயம் அவர்கள் மீதிவில்லை. இன்னுமவர்கள் சஞ்சலப்படக்கூடியவர்களல்ல.

அறிந்துக்கோள்:- மேற் சொல்லப்பட்டுள்ள கூட்டத்தார்கள் இஸ்லாமதத்தைத் தழுவி இணக்கமான அமல் செய்வார்களானால் அவர்களது முந்திய செயலைக்குறித்தும் அவர்களது பிதாக்களின் செயலைக்குறித்தும் அவர்கள் மீதில் குற்றஞ்சாட்டப்படமாட்டாது. அவர்களுக்குக்கொடுக்கப்படும் கூலியையும் குறைக்கப்படமாட்டாது.

61

ஆய் யூதர்களே! நீங்கள் தௌராத்து வேதத்தின் பிரகாரம் கிரிகைகள் புரிந்து வரும்படி நாமுங்களிடம் வாக்குறுதி எடுத்து

மலையைப்பிடுங்கி உங்கள் தலைக்குமேல் உயர்த்திக்கொண்டு நாம் உங்களுக்குதந்திருக்கின்ற தௌராத்தென்னும் திருமறையைப் பலமாய் பற்றிப்பிடித்து அதின் பிரகாரம் வணக்கஞ்செய்யுங்கள் நீங்கள் பூமண்டலத்தில் இந்த அழிவைவிட்டும் இறுதிநாள் இமிசையைவிட்டும் ஈடேற்றம்பெறுவதற்காகஉங்களுக்குச்சொன்னோம்.

இந்த ஆயத்து இறங்கியதின் விபரமாவது:- மூஸா (அலை) அவர்களுக்கு ஆண்டவன் தௌராது வேதத்தை இறக்கிவைத்து அதின்பிரகாரம் கிரிகைகள்செய்து வரும்படி ஆக்ஞாபித்திருந்தான். மூஸா (அ,லை) அவர்கள் தம்முடைய கூட்டத்தார்களை தங்கள் வேதக்கட்டளைப்படி கிரிகை முதலானதுகள் செய்துவரும்படி சொன்னார்கள். அக்கூட்டத்தினர்கள் அம்மத அநுஷ்டான முறைகள் அதிகக்கடினமாயிருப்பதைக் கருதி ஒப்புக்கொள்ள பின் வாங்கினர் வர்ப்புறுத்தியும் கவனிக்கவில்லை. அப்பால் அவர்களுக்கு அறிவுறுத்தும்படி பலஸ்தீன் என்னும் ஊர் மலையைப்பிடுங்கி அவர்களின் மீதில் தள்ளச்சொன்னான். இறைவன் ஆக்கினைப்படி ஜிப்ரீல் (அலை) அவர்கள் அம்மலையைப்பிடுங்கி அக்கூட்டத்தினர்களின் தலைக்கு மேல் குடைபோல் உயர்த்திக்கொண்டு நீங்கள் தௌராது வேதத்தை யநுஷ்டிக்காவிடில் இம்மலையை உங்கள்மீதில் இப்படியே விடப்படுமென்று பயப்படுத்தினார்கள். உடனே அக்கூட்டத்தினர் அஞ்சி இறைவனது கட்டளைக்குக்கீழ்ப்படிந்து நடப்பதாய்ச் சம்மதித்தார்கள்.

62

பின்பு அம்மதத்தை சம்மதித்துவிட்டு பிறகு அதில் நின்று நீங்கிக்கொண்டார்கள். ஆனால் ஆண்டவன் உங்கள் மீதில் இமிசையை அனுப்புவதைப்பிற்படுத்துவது நிமித்தம் அவன்வரிசையும் தயாளமும் உங்கள் மீதிலில்லாதிருக்கில் நீங்கள் நஷ்டப்பட்டவர்களில் நின்றுமுள்ளவர்களாயிருப்பீர்கள்.

63

யூதர்களே! உங்கள் முன்னோர்களில் சனிக்கிழமைத்தினம் ஆக்கினையைமீறி நடந்தவர்களை நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். அவர்கள ஆக்கினையை மீறி நடந்தபடியால் அவர்களை நோக்கி குரங்காகுங்களென்று சொன்னோம். அவர்கள் தாழ்மைப்பட்டவர்களாய் குரங்கானார்கள்.

யூதர்கள் குரங்கான சமாசாரத்தின் சங்கிரம்சம் பின் வருமாறு.- தாவூது (அ,லை) அவர்கள் காலத்தில் அப்லா வென்றும் நகரத்தில் யமீன் வேட்டையாடும் யூதர்கள் ஏராளமாயிருந்தார்கள். அவர்களுக்கு சனிக்கிழமை ஓய்வு நாளாக்கி அத்தினத்தில் அவர்களுக்கு மீன் வேட்டையை விலக்கப்பட்டிருந்தது. அவ்வூர் கடலோரமாய் சனிக்கிழமை மச்சங்கள் ஏராளமாய் வந்து கூடி நிற்கும் அப்படிமீன்கள் ஏராளமாய் வந்து கூடிநிற்பதற்குப்பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அம்மச்சங்களின் மீது அந்த யூதர்களுக்கு ஆசையுண்டாகி வெள்ளிக்கிழமையன்றுசில உபாயங்கள் செய்து சனிக்கிழமையன்று அம்மச்சங்களை தேக்கிவைத்து ஞாயிற்றுக்கிழமை அவைகளை கைப்பற்றிக்கொள்வார்கள் வெளித்தோற்றத்திற்கு சனிக்கிழமையன்று வேட்யைாடுவதாக காணப்படாமலிருந்தது. இப்படி செய்துக்கொண்டு வரும்பொழுது அதனல் அவர்கட்கு யாதொரு தீங்கும் நேரிடாததைக்கண்டு எல்லாரூளும் நமக்கு மீன் வேட்டையாடுவது ஆகுமென்றுகருதி சனிக்கிழமையும் வேட்டையாடினார்கள். அதின்மூலியமாய் அவர்களுக்கு ஏராளமான முதலுண்டாயிற்று. அவ்வகுப்பினர்கள் 70000ம் பேர் என்று சொல்லப்படுகின்றது. அவர்களெல்லோரும் வேட்டையாடவில்லை. சிலரே வேட்டையாடினார்கள். மதக்கட்டளையை மீறிநடப்பதினல் கெடுதல் நேரிடக்கூடுமென்று அவர்களுக்குள் அபிப்பிராயப்பேதகமேற்பட்டு ஒருவரோடொருவர் பிரிந்து நகரத்திற்கு எல்லைக்கெட்டிக்கொண்டு வெவ்வேறாயிருந்தார்கள், அவர்கள் புரிந்துவரும் செயலைக்குறித்து தாவூது (அ,லை) அவர்கள் சபித்தும் அதையவர்கள் கவனிக்கவேயில்லை. இறுதியில் இறைவனுக்கு அவர்கள்மீது கோபமுண்டாகி மச்சம்

வேட்டையர்டியவர்களை குரங்காகும்படி சபித்தான்: அவர்கள் சனிக்கிழமை வேட்டைக்குச்சென்று விட்டு இரவில் வீட்டில் வந்து படுத்துக்கொண்டார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை அவர்கள் வீடு திறக்கப்படாமலும், மனுசப்தமில்லாமலும் இருந்ததை அறிந்து கதவுகளைத் திறந்துபார்க்கும்பொழுது அவர்களனைவரும் வால்முளைத்த குரங்குகளாய் ஊளையிட்டுக்கொண்டிருந்தார்கள். இச்சம்பவத்தைப்பார்க்க வந்திருந்த தங்கள் பந்துக்களை அக்குரங்குகள், வஸ்திரங்களை முகர்ந்துபார்த்து தன் இனத்தார்களை நன்கறிந்து அழுதிற்று. அப்பொழுது அக்குரங்குகளின் இனத்தார்கள் முன்னமே நாங்கள் உங்கட்குச் சொல்லவில்லையா? எங்கள் வார்த்தைகளை நீங்கள் மீறிநடந்ததினால் இக்கதிக்குள்ளானீர்கள் எனக்கூறினார்கள். அக்குரங்குகள் ஆம் என் தலையை அசைத்துக்கொண்டு அவ்வாறிருந்து மூன்றும்நாள் முற்றும் இறந்துவிட்டன.

64

அக்காலத்தினரும், பிற்காலத்தினரும் அவர்களைப்போல் செய்யாமல் உறுதியுடன் பக்தியாயிருக்கும் வண்ணம் நாம் ரூபமாற்றினோம். நாயனை அஞ்சியவர்கட்கு உணர்ச்சியுண்டாக அவ்வாறு செய்தோம்.

65

மூஸா (அலை) தம்முடைய சகாக்களை நோக்கி நிச்சயமாக அல்லாஹ்வாகிறவன் ஓர் மாடறுக்கும்படி ஏவல் செய்திருக்கிறானென்றார்கள். அக்கூட்டங்கள் மூஸாவே! உம்மிடம் நாங்கள் ஒரு கொலைவிஷயத்தைக்குறித்துக்கேட்க அதற்கு முற்றும் விரோ

தமாய் எங்களை மாடறுக்கக்கூறி பரிகாசமா பண்ணுகிறீரென்று சொன்னார்கள். வினுவுக்கு விடையளிக்க அறியாத மூடனில் நின்றும் நான் ஒருவனயிருப்பதைவிட்டும் இறைவனைக்கொண்டு காவல்தேடுகிறேனென்றார்கள்.

மாடறுக்கும்படி சொல்லிய விபரமாவது:- இஸ்ரவேலர்களின் கூட்டத்தில் ஒரு செல்வந்தனிருந்தார். அவரது சொக்காரர்கள் அவரின் சொத்துக்களைப் பாகம்பண்ணிக்கொள்ளக்கருதி அவரைக்கொலைசெய்து தங்கள் மீதில் இக்கொலைக்குற்றம் ஏற்படாமலிருக்கும்பொருட்டு மற்றொரு இடத்தில் கொண்டுபோய் அப்பிரேதத்தைப் போட்டுவிட்டு அங்குள்ள மனிதர்கள் மீதில் பழிச்சாட்டினார்கள் பின்பு சத்தியத்தை மறைத்துக் கொண்டு இதுவிஷயத்தில் மூஸா (அலை)அவாகளை நியாயத்தீர்ப்பளிக்கும் படி வேண்டிக்கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மூஸா (அலை) அவர்கள் நியாயத்தை வெளியாக்கும்பொருட்டு அப்பிரேதங் கிடக்குமிடத்திற்குச்சென்று அங்குள்ளஜனங்களை வரவழைத்துகொலைவிஷயத்தைக்குறித்துக்கேட்டார்கள். அச்சனங்கள்நாங்கள்நிரபராதியாயிருப்பதினுல் எங்களுக்கு மேல்படி கொலைவிஷயம் யாதொன்றுந்தெரியாது பொருமையினுல்எங்கள் மீதில் அநியாயமாய் படர் கூறுகிறூர்களென்று பதிலிறுத்தார்கள்.

இக்கொலையை எவ்விதமும் துலக்கவேணுமென்று மூஸா (அலை)அவர்கள் கருதி நாயனிடம் இதைக்குறித்துக்கேட்டார்கள். அப்பொழுதுநாயன் ஒரு மாட்டையறுத்து அதின் நாவைக்கொண்டு இறந்தவன் மீதிலடித்தால் இறந்தவன் உயிர்த்தெழும்பிதன்னை வெட்டினவனைச் சொல்லுவானென்று நாயன் சொன்னன். அவ்விஷயத்தை மூஸா(அ'லை)அவர்கள் அந்த இஸ்ரவேலர்களிடஞ் சொல்லியதற்கு அவர்கள் நாங்கள் கேட்டவைகளுக்கு முற்றும் விரோதமாய் கூறுகிறீர் என்று சொன்னார்கள்.

அக்கூட்டத்தினர்கள் உமது நாயனிடம் அது எவ்வளவு வய

சுள்ளமாடென்று எங்களுக்காக கேளும், அதை அவன் விவரிப்பானென்று சொன்னார்கள். அப்பொழுது நாயன் சொல்லுகிறான் அறுக்கும்படி கூறியது ஒருமாடாயிருக்கும் அது கிழடுமல்ல கன்றுமல்ல நடுத்தரமுள்ளது. ஆதலின் அறுக்கும்படி எவல் புரிந்ததைச் செய்யுங்கள் என மூஸா கூறினார்.

67

179845

மேலும் உமது நாயனிடம் எங்களுக்காகக்கேளும், அவன் அம்மாடானதுஇன்ன நிறமுள்ளதென்றுவிபரஞ்சொல்வானென்று சொன்னார்கள். மூஸா சொன்னார் அதானது ஒரு மாடாயிருக்கும் அதின் நிறமானது கலப்பற்ற மஞ்சள். பார்க்கிறவர்களை அது உற்சாகப்படுத்துமென்று நாயன் கூறுகிறானென்று சொன்னார்கள்.

68

உமது நாயனிடம் எங்களுக்காகக்கேளும் அவன் அது வேலைசெய்யும் மாடு அல்லது காலியாய் மேய்ந்துக்கொண்டு திரியும் மாடு என்ற விபரத்தைக்கூறுவான். அம்மாட்டின் அடையாளமானது பிசகிறது நன்றாய் விளங்கவில்லை. அப்படி அனேகமாடுகளிருக்கின்றன இன்னமாடென்று நிச்சயமாய்த் தெரியவில்லை அல்லா (ஹு) நாடினால் நிச்சயமாய் நாங்கள் இத்தடவையில் அது

இன்ன மாடென்றுக்கண்டுக் கொள்வோமென்று அக்கூட்டத்தார் கூறினார்கள்,

69

நாயன் சொல்லுகிறான் அதானது ஒரு மாடாயிருக்கும் அது உளவுமாடுமல்ல வெள்ளாமைக்கு தண்ணீர் இறைக்ககூடிய மாடுமல்ல அதில் யாதொரு குற்றமும் வேலைசெய்த அடையாளமுங்கிடையாது. அது கொம்புதொடுத்து கொளம்புவரையும் ஏகமஞ்சள்நிறத்தைத்தவிர இதரநிறங்கள் கிடையாதென்று மூஸாசொன்னார் அக்கூட்டங்கள் இப்பொழுதுதான் சரியான விபரங்கூறினீர் அது இன்ன மாடென்று நன்றாய் அறிந்துக்கொண்டோமென்று சொன்னார்கள். அம்மாட்டை வாங்கி அறுக்கப்பட்டது அம்மாடானது அதிக விலையுயர்ந்ததாயிருந்தபடியால் வாங்கி | அறுக்க சக்தி பெறாதவர்களாயிருந்தும் பின்பு வாங்கி அறுத்தார்கள்.

70

நீங்கள் ஒரு ஆன்மாவை வெட்டிக்கொலைபுரிந்துவிட்டு அக்கொலையை நீங்கள்வேறொருவர் மீதில் சாட்டிவிட்டுத் தந்திரமாய் விலகிக்கொள்ளப்பார்த்தீர்கள். அல்லா (ஹ்) வானவன் நீங்கள் மறைககிறவர்களாயிருந்ததை வெளிப்படுத்திவிட்டான்.

இந்த ஆயத்தானது பிந்தியதாயிருந்தபோதிலும் வர்த்தமானத்தில். இதுதான் முவர்க்கமானது.

71

அம்மாட்டின் நாவை அல்லது விலா எலும்பைக்கொண்டு வெட்டுண்டவனை அடிக்கச்சொன்னோம். அவன்னையடிக்கவே வெட்டுண்டவன் உயிர்த்தெழும்பி என் சிற்றப்பன் மகன் என்னை வெட்டினானென்று கூறிவிட்டு உடனே இறந்துவிட்டான் இப்பொழுது உயிர்த்தெழுப்பியதுபோதுபோல் கியாம நாளிலும் இறந்தவர்களை இறைவன் உயிர்த்தெழுப்புவான், சர்வவல்லமையும் அவனுக்குண்டென்றஅத்தாக்ஷிகளையும்உங்களுக்குக்காண்பிப்பான். நீங்கள் நன்குணர்ந்து உங்களது ஆன்மாக்களை துன்மார்க்கத்தை விட்டும் விலக்கிக்கொள்வீர்களாக.

வெட்டுண்டவன் தன்னை வெட்டினவனைக் கூறவே பெரும் ஆச்சரியமுண்டாகி வெட்டினவனை பழிவாங்கப்பட்டது. அவர்கள்கருதியபடி இறந்தவனது சொத்தில் பாகம்பிறிக்கவுமில்லை.

72

பின்பு யூதர்களே! மலையுருகி ஜலம்மாகும் திருஷ்டாந்தத்தைக்கேட்டறிந்தும் உங்களின் ஹிருதயங்கள் ஹக்கையொப்பாமல் இருகலாயிற்று. அந்த ஹிருதயங்களாவது கல்லைப்போலிருக்கின்றது. அல்லது இருக்கத்தில் கல்லைவிடக்கடுமையாய்யிருக்

கின்றது. ஏனென்றால் சிலகற்களில் நின்றும் நிச்சயமாக நதிகள் ஒலிக்கின்றன. இன்னும் சிலகற்கள்பிளந்து ஜலம்புறப்படுகின்றது. இன்னம் சிலகற்கள் தன் நாயனை யஞ்சி செங்குத்தான மலையிலிருந்து கீழே இறங்குகின்றது நீங்கள் புரிந்துவரும் செயல்களை நாயன் மறந்தவனல்ல.

73

ஆய் மெய்விசுவாசிகளே! அவர்கள் உங்கள் சொற்களைக் கேட்டு நிர்ணயங்கொள்வார்களென்று ஆதரவு வைக்கிறீர்களா? அப்படிவைக்காதேயுங்கள். ஏனெனில் அந்த யூதர்களின் முன்னோரில் ஒருவகுப்பினர் தௌராது திருமறையில் ஆண்டவன் திருவசனத்தைக்கேட்டறிந்து தங்களைப்பொய்யரென்றுணர்ந்திருக்க ஆண்டவனது திருவசனத்தை நன்றாயோசித்து உறுதியாக்கிக் கொண்டபின்னர் அதையவர்கள் பிரட்டிவிட்டார்கள்.

அறிந்துக்கோள்:- இதின் விபரமாவது மூஸா (அலை) அவர்கள் தங்களுடன் சிலமனிதர்களை ஆண்டவனது திருவசனத்தைகேட்டறிந்து நம்பிக்கைவைப்பதற்காக கூட அழைத்துச்சென்றார்கள். அவர்கள் ஆண்டவனது திருவசனத்தை நன்றாய்க்கேட்டறிந்துக்கொண்டு அங்கு உண்மைகொண்டார்கள். அங்கிருந்து ஊருக்குவந்தபின் ஊர்ஜனங்கள் அவர்களிடம் ஆண்டவனது திருவசனத்தைப்பற்றிக்கேட்டதற்கு நடந்தவைகளை முற்றும் விபரமாய் எடுத்துக்கூறிவிட்டு இறுதியில் உங்களால் ஏலுமானதை செய்யுங்கள் ஏலாததை நீங்கள் செய்யாததைப்பற்றி உங்களை குற்றம்பிடிக்கமாட்டேனென்று சொல்லியிருக்கிறானென்றார்கள். இதுதான் அவர்கள் பிரட்டின விஷயம் இந்த ஆயத்தில் யூதர்களின் அயோக்கியத்தன்மையைக்குறித்து அழுத்தமாய்க்கூறியிருக்கிறான்.

74

மெய்விசுவாசிகளை யூதமதத்திலுள்ள முனாபிகீன்கள் சந்தித்தால் உங்களைப்போல் நாங்களும் ஈமான்கொண்ட உண்மை முஸ்லீம்களென்று அவர்களுக்கு திருப்தியுண்டாகக்கூறுவார்கள். இனியவர்களில் சிலர் சிலரை சந்தித்தால் மேற்கண்டவாறு சொன்னவர்களைபார்த்து இறுதி நபியாகிய முஹம்மது (ஸல்) அவர்களின் வர்ணிப்புகளில் நின்றும் நாயன் உங்களின் திருமறையாகிய தௌராதில் உங்கட்கு அறிவித்திருக்கின்றதைக் குறித்து அவரின் நண்பர்கள் உங்களின் நாயனது சந்நிதானத்தில் முஹம்மது(ஸல்)அவர்களைப் பின்பற்றுதிருப்பதைக் குறித்து உங்களிடம் தர்க்கிப்பதற்காகவா இவ்வாறு அவர்களிடம் கூறுகிறீர்கள் இவ்வளவுகூடநீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டாமா எனக்கூறுவார்கள்.

75

அவர்கள் மறைக்கின்றதையும், வெளியாக்கிறதையும் நிச்சயமாய் நாயனறிவானென்று அந்த (முனாபிகீன்) ஒப்பாசாரக்கள்ளர்கள் அறியமாட்டார்களா?

76

இன்னமவர்களில் எழுதப்படிக்கத் தெரியாத மூடர்களிருக்கின்றார்கள். அவர்கள் தௌராத்தை அறியமாட்டார்கள். எண்ணி

னும் தங்கள் தலைவர்களிடமிருந்து சிலபொய்களைக்கற்று அதைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டார்கள். இன்னமவர்கள் திடகாத்தமான எண்ணமில்லாத எண்ணத்தைக் கருதியவர்களேயல்லாது வேறல்ல.

77

தங்கள் கரத்தைக்கொண்டு மனயுக்தியாய் வேதமெழுதி பின்பு தாங்கள் எழுதப்பட்டுள்ள பிரதிகட்குச்சொற்பவிலை வாங்கும்பொருட்டு இதுதான் தௌராத்திலுள்ள ஆண்டவனது திருவசனமென்று சொல்கிறவர்களுக்கே வைலென்னும் நரகவாய்க்காலாயிருக்கும் அவர்களின் கரங்கள் எழுதினதால் அதுஅவர்கட்கே கேட்டை விளைவித்தது அவர்கள் வாங்கிய கைக்கூலியில் நின்றும் தங்களுக்கே அனர்த்தத்தைத் தேடிக்கொண்டார்கள்.

ரிவாயத்து:- நம் நபிபெருமானவர்கள் திருமதீனமாநகருக்கு விஜயஞ்செய்த பொழுது அங்குள்ள யூதமதத்தலைவர்கள் தங்கள் மதஸ்தர்கள் இஸ்லாமதத்தைத் தழுவிக்கொண்டால் தங்கள் தலைமை ஸ்தானத்திற்கும் பாமர ஜனங்களால் தங்களுக்குக் கிடைத்துவரும் வரும்படிக்கும் ஹானி நேரிடுமென்க்கருதி நம்நபிபெருமானவர்களின் அடையாளங்கள் தௌராத்தில் கூறப்பட்டுள்ளதற்கு முற்றும் மாற்றமாய் எழுதி அப்பாமர ஜனங்களிடங்கொடுத்து சன்மார்க்கமாகிய இஸ்லாமதத்தைத் தழுவாமற் செய்தனர் அப்பாமர ஜனங்களிடம் நம் நபிபெருமானவர்களின் அடையாளங்களைப் பற்றி கேட்கப்பட்டால் தங்கள் தலைவர்களாலெழுதிக்கொடுக்கப்பட்டிருக்கும் பிரதிகளை நம்பிக்கை வைத்துக்கொண்டு எங்கள் மதத்தில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசி முஹம்மதல்லவென்று நம் நபிபெருமானவர்களை நிராகரிப்பார்கள்.

78

எங்களைக்குறிப்பிட்ட நாளேயல்லாது அக்கினி தீண்டாதென்று அந்த யூதர்கள் சொன்னார்கள். முஹம்மதே அவர்களிடம் கேளும் நீங்கள் வாக்குறுதி வாங்கியிருக்கிறீர்களா? அவ்வாறாயின் அல்லா(ஹ்) வாக்குறுதிக்கு மாற்றஞ் செய்யமாட்டான். அல்லது நீங்கள் அறியாதவிஷயத்தை அல்லா(ஹ்) சொன்னானென்று கட்டுரை கூறுகிறீர்களா?

79

மெய்யாகவே அவர்களுக்கு சதாகாலமும் ஹிம்சையுண்டும் எவனொருவன் தீமை புரிந்து அத்தீமையினால் ஏற்பட்டுள்ள குற்றமானது அவனது ஹிருதயம் நாவு முதலியவைகளைச்சூழ்ந்து அதனால் அவர்கள் இறப்பார்களானால் அவர்கள் நகரவாதியாயிருக்கும் அந்நரகத்திலேயே சதாகாலமும் தரிபடுவார்கள்.

80

நிச்சயமாக அல்லா(ஹ்)வையும் அவனது திருத்தூதராகிய

நபி முஹம்மது(ஸல்)வையும் உண்மைகொண்டு இணக்கமான வணக்கம் புரிந்தவர்கள் சுவர்க்க வாதிகளாயிருக்கும். அவர்கள் அதில் எக்காலமும் தரிபடுவார்கள்.

இத்திரு வசனத்தின் பிரகாரம் திட்டமாய் பாபிகளுக்கு நரகமுண்டென்றும் நிச்சயமாய் மூமீன்களாகிய அச்சந்தீர்ந்தவர்கட்கு சுவர்க்கமுண்டென்றும் உறுதியாகின்றது. ஆதலின் சகோதரர்களே! தீவினையையகற்றி நற்செய்கை புரிந்து ஆண்டவனின் சமாதான வழியாகிய இஸ்லாத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சதாகாலமும் சுகண்டியாய் ஜீவித்திருக்கும்படியான சுவர்க்கத்திற்கு பூமியிலிருக்கும்போதே சொத்துக்களாகிய நன்மைகளை சம்பாத்தியஞ் செய்துக்கொள்வீர்களாக.

81

பின்னும் நினைத்துப்பாரும் நாம் இஸ்ரவேலின் மக்களிடம் நீங்கள் ஏக தெய்வமாகிய அல்லா(ஹ்)வைத்தவிர வேறொன்றையும் வணங்கவேண்டாமென்றும், தாய், தந்தை, சுற்றத்தார், ஏழை எளியது, அனாதை இவர்களுக்கு உதவிபுரியுங்களென்றும் இறுதி நபியாகிய முஹம்மது(ஸல்) அவர்களின் விஷயங்களைக்குறித்து உங்களிடங் கேட்டால் அவர் வர்ணிப்புகளை மறையாமல் சத்தியமுள்ளவரென்று அழகான வார்த்தைகளாய்ச் சொல்லுங்களென்றும், தரிபாடாய்த்தொழுது வாருங்களென்றும், உங்கள் முதலில் நின்றும் சகாதுக்கொடுங்களென்றும் வாக்குறுதி எடுத்தோம் நீங்

கள் மேற்கூறியவைகளை நிறைவேற்றுவதாய் ஒப்புக்கொண்டீர்கள் உங்களிற் சிலரைத்தவிர மற்றவர்களனைவரும் அவ்வாக்குறுதியில் நின்றும் பிறண்டுவிட்டார்கள். நீங்கள் வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்கள் அல்ல.

82

ஆய் யூதர்களே! உங்களில் ஒருவரையொருவர் உதிரம் ஒட்டக்கூடாதென்றும், உங்களில் ஒருவரையொருவர் வீட்டை விட்டும் துரத்தக்கூடாதென்றும் வாக்குறுதி வாங்கினோம். அதை நீங்கள் சம்மதித்துக்கொண்டதாய் உறுதி சொன்னீர்கள். அச்சமையம் அதை ஏற்றுக்கொண்டதாய் சாக்ஷியும் சொல்லுகிறீர்கள்.

83

பின்பு இப்பொழுது வாக்குறுதிக்கு மாற்றஞ்செய்துக் கொண்டிருக்கும் யூதர்களே! உங்களில் ஒருவரையொருவர் வெட்டிக்கொள்கிறீர்கள். இன்னும் நீங்கள் உங்களில் ஒரு கூட்டத்தார் மீதில் எல்கை கடந்தும் மாற்றமாயும் அவர்களுக்குக்கேடுண்டு பண்ண சத்துருக்களுக்கு உடந்தையாயிருந்து அவ்வகுப்பினரை அவர்களின் கிரஹத்தை விட்டும் வெளியாக்குகிறீர்கள்.

84

இனி உங்களில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் வந்தால் அவர்களை தங்கள் வீட்டை விட்டும் வெளியாக்குவது ஆகாத காரியமாயிருக்க அதை சத்துருக்களுடனே சேர்ந்து செய்துவிட்டு அவர்களை சிறையில் நின்றும் மீட்டி விடுகிறீர்கள். திருமறையில் சிலதை நிர்ணயங்கொண்டு சிலதை மறுக்குகிறீர்களா? உங்களில் நின்றும் இவ்வேலைபுரிகிறவர்கட்கு பூலோகத்தில் தாள்மையேயன்றி வேறல்ல இனி முடிவுகாலத்தில் அந்தயூதர்களை கடுமையாய் ஹிம்சிக்கப்படும் ஸ்தலத்திற் சேர்க்கப்படும். அவர்கள் புரிந்து வரும் பொல்லா கிரிகைகளை ஆண்டவன் மறந்தவன் அல்ல.

இந்த ஆயது இறங்கியதின் விபரமாவது:- ஆண்டவன் தௌராது வேதத்தில் யூதர்களிடம் நான்கு உடன்படிக்கை செய்திருந்தான். அதில் (1)வது அவர்களில் ஒருவரையொருவர் வெட்டிக்கொள்ளாதிருக்கல்(2)வது ஒருவரையொருவர் வீட்டை விட்டும் வெளியாக்கமாவிருக்கல். (3) வது பகைஞர்களுடன் சேர்ந்து கெடுதியை விளைவிக்காதிருத்தல். (4)வது சிறைபிடிக்ககப்பட்டவர்களை மீட்டல் ஆக இந்நான்குகளாயிருக்கும். இதில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை மாத்திரம் உடன்படிக்கைப்படி நிறைவேற்றினார்கள். மற்ற மூன்றையும் உடன்படிக்கைக்கு விரோதமாய் நடத்திக்கொண்டு வந்தார்கள். அதின் நிமித்தம் யூதர்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ளவற்றில் சிலதை நிறைவேற்றியும் சிலதை நிறைவேற்றாமலுமிருந்தார்களென்று இந்த ஆயத்தில் கூறப்படுகின்றது.

85

மேற்படியார்கள் ஆகிரத்தை விற்று துன்யாவை விலைக்கு
வாங்கினவர்களாயிருக்கும் ஆதலின் அவர்கட்கு அதாபென்னும்
ஹிம்சையை இலேசாக்கப்படமாட்டாது. மேலும் அவர்களை
துன்பத்தை விட்டுங் காப்பாற்றப்படவுமாட்டாது.

86

நிச்சயமாக மூஸாவுக்கு தௌராது வேதத்தைக்கொடுத்தோம்
அவருக்குப்பின் ஒவ்வொரு ரசூலாய் தொடர்ச்சியாக்கினோம். மே
லும் நாம் மரியமுடைய குமாரன் ஈஸாவுக்கு தெளிவான அற்புதங்
களைக்கொடுத்தோம். மேலும் பரிசுத்த ஆத்துமாவாகிய ஜிப்ரீலைக்
கொண்டு ஈஸாவுக்கு பலம் கொடுத்தோம். அவர் செல்லும் ஸ்த
லமெல்லாம் ஜிப்ரீலும் கூடச்செல்வார் உண்மையானவைகளில்
லின்றும் உங்கள் ஹிருதயத்திற்குப்பிடித்தமில்லாதவற்றை ரஸுல்
கொண்டு வரும் பொழுதெல்லாம் நீங்கள் அவரைப்பின்பற்ற பெ
ருமையடிக்கிறீர்களா? முஹம்மது ஈஸா போன்ற சில தீர்க்க
தரிசிகளைப் பொய்யாக்கினீர்கள் மேலும், சகரிய்யா, எஹ்யா
போன்றவர்களை வெட்டி கொலைபுரிந்தீர்கள்,

கவனிப்பு:- மரியம் அலைஹஸ்ஸலாம் அவர்கள் ஸ்திரியாயிருந்தும் அவர்களை இறைவன் தீர்க்கதரிசிகளுடனே தீர்க்கதரிசிகளை அழைப்பது போல் ஏழுஸ்தலத்தில் மரியமே! என்று பேரைச்சொல்லி அழைத்திருக்கிறான். ஏனெனில் அவர்கள் அரியதவம் புரிந்து வந்த காரணத்தால் அவர்களுக்கு இவ்வுன்னத பதவி கிடைத்தது.

ஸுரியானி பாஷையில் மரியம் என்ற நாமத்திற்கு அர்த்தமாவது தவஞ்செய்யும் அடியாள் என்பதே.

87

அந்த யூதர்கள் நீர் கூறும் விஷயங்களை எங்கள் ஹிருதயம் விளங்கவில்லை மூடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள் அப்படியல்ல எனினும் அவர்கள் சத்தியத்தை அலக்ஷியஞ்செய்தபடியினால் அவர்களை இறைவன் சபித்து சத்தியத்தைபொப்பாமலாக்கினனேயன்றி ஹிருதயத்தில் பிழையுண்டாயிருப்பதினால் அதை பேற்றுக்கொள்ளாமலிருக்கவில்லை. யூதர் இஸ்லாம் மதத்தைத் தழுவுவது மிகச்சுருக்கம்.

88

முஹம்மது(ஸல்) அவதாரமாகுமுன் யூதர்கள் சத்துருக்கள் மீதில் முஹம்மதைக்கொண்டு உதவிதேடினவர்களாயிருந்தார்கள் அப்பொழுது அவர்கள்வசமிருக்கும் தௌராத்தையுண்மையாக்கின குர்ஆன் அவர்களுக்கு வந்தபொழுது வருவாரென்று எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்களே அந்த முஹம்மது(ஸல்) இஸ்ரவேலர்க

ளிலிருந்து வாராமல் அரபியிலிருந்து வந்ததினால் அவர்மீது பொறாமைகொண்டு நாங்கள் எதிர்பார்த்திருந்த தீர்க்கதரிசி முஹம்மது அல்லவென்று கூறினார்கள். ஆதலின் அக்காபிர்களின் மீதில் இறைவன் முனிவுண்டாகக்கடவது என்று சபித்தான்.

89

யூதர்கள் தங்கள் ஆன்மாக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகளைக்கொடுத்து வாங்கிய வஸ்துவானது கெட்டது அதாவது ஆண்டவன் தனது அடியாரில் (நபிநாயகம்) நின்றும் நாடியவர் மீதில் தனது வருஷையான வஹியை இறக்குகிறானென்று பொறாமைகொண்டு அவனிறக்கிய குர்ஆனை மறுத்தளித்தது மிகக் கெட்டவேலை. ஆதலின் யூதர்கள் கோபத்துக்குமேல் கோபத்தைக் கொண்டு மீண்டார்கள். மேலும் அவர்களுக்கு கேவலம் கிடைக்கும்படியான ஹிம்சையுமுண்டும்.

90

அல்லா(ஹ்) இறக்கி வைத்த திருகுர்ஆனைக்கொண்டு ஈமான் கொள்ளும்படி யூதர்கட்குச் சொன்னால் எங்கள் மீதிலிறக்கப்பட்

டிருக்கும் தௌராத்தைக்கொண்டுதான் (ஈமான்) உண்மைகொள்வோம். அதே எங்களுக்கு போதுமானதென்று கூறி தங்களது வேதத்தைத்தவிர மற்ற வேதத்தை மறுத்தளிப்பார்கள். அவர்களின் தௌராத்து வேதத்தை உண்மையாக்கிய ஹக்கான வேதத்தை நிராகரிப்பார்கள். முஹம்மதே! நீர் அந்த யூதர்களிடங் கேளும் நீங்கள் தௌராத்தைக்கொண்டு உண்மை கொண்டிருந்தால் அதில் தீர்க்கதரிசிகளை வெட்டவேண்டாமென்று விலக்கியிருக்க ஏன் வெட்டினீர்கள். அவர்கள் வெட்டாமலிருந்தாலும் அவர்கள் முன்னோர்கள் வெட்டியதை அங்கீகரித்திருக்கிறார்கள்.

91

மேலும் நிச்சயமாக மூஸா உங்கட்கு அநேக அற்புதங்களைக் கொண்டு வந்தார் அப்படியிருக்க பின்பு நீங்கள் அநீதமுடையவர்களாயிருந்ததினால் அந்த அற்புதங்கள் காண்பித்த பிறகும் காளைமாட்டை தெய்வமாக்கிக்கொண்டீர்கள்.

92

மேலும் தௌராத்தை அநுஷ்டித்து அதின்படி சகல கிரிகைகளும் புரிந்து வரும்படிக்கும் உங்கட்கு நாம் கொடுத்திருக்கிற தௌராத்தைப் பலமாய்ப்பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள் என்றும் உங்கள் தலைக்குமேல் தூர்ஸென்ற மலையை உயர்த்திக்கொண்டு வாக்குறுதி எடுத்தோம். மேலும் நமது சொற்களைக்கேட்டு நடவுங்கள் இல்லையேல் இம்மலையை உங்கள் மீதில் விடப்படுமென்

ரோம். அப்பொழுது உன் சொற்களைக் கேட்டுக்கொண்டோம். ஆனால் உனது ஏவலுக்கு வழிப்படாமல் மாற்றஞ்செய்தோமென்றார்கள். அவர்கள் காபிராயிருந்ததின் நிமித்தம் அவர்களின் ஹிருதயங்களில் மாட்டை ஆராதனை செய்வதில் அன்பு புகட்டப்பட்டிருக்கின்றது. நீங்கள் உண்மையாக தௌராத்தைக் கொண்டு ஈமான் கொண்டு அதை அநுஷ்டித்து வந்திருந்தால் உங்களது ஈமான் ஏவல் செய்தது துன்மார்க்கமென்று சொல்லும்.

கர்த்தாவது தௌராத்தை அநுஷ்டித்து வந்திருந்தால் அம்மதம் காளைமாட்டை வணங்கச்சொல்லாது. ஆனபடியால் உண்மையில் நீங்கள் தௌராத்து வேதத்தை அநுஷ்டித்தவர்கள் அல்ல.

93

ஆப் யூதர்களே! பலோகத்து வீடானது யாருக்குமில்லாமல் இறைவன் சமுகத்தில் உங்களுக்கே சொந்தமாயிக்குமானால் அது சொந்தமென்று கூறியதில் உண்மையுள்ளவர்களாயின் மரணத்தை இறைவன் சந்நிதானத்தில் விரும்புங்களென்று சொல்லும் (ஏனெனில் ஒருவன் சுவர்க்கஞ்செல்ல நாடுவானாகில் அங்கு மரணத்துக்குப்பின் செல்லமுடியுமேயன்றி மரணத்துக்குமுன் செல்லமுடியாது. அதற்காக மரணத்தைக் கேட்கும்படி சொல்லப்பட்டது.)

இந்த ஆயத்து இறங்கியதின் காரணமாவது:- யூதர்கள் லன்யத்துலுல் ஜன்னத என்ற ஆயத்தையோதி யூதர்களும், கிறிஸ்தவர்களும் தவிர மற்றவர்கள் ஒருபோதும் சுவர்க்கம் புகுதமாட்டார்களென்று கூறினார்கள் அதற்காக இந்த ஆயத்து இறங்கிற்று.

94

அவர்களின் கரங்கள் பாவத்தை முற்படுத்தியதின் நிமித்தம்

ஒருகாலமும் அவர்கள் மரணத்தை விரும்பமாட்டார்கள். அல்லா ஹுதஆலா அந்த அநியாயக்காரர்களாகிய யூதர்களை நன்கறிந்தவன்.

இதின் விபரமாவது:- யூதர்கள் மரணத்தை அபேக்ஷிக்கவே மாட்டனர். ஏனெனில் அவர்கள் மரணத்தை விரும்பும் பக்ஷத்தில் உடனே நுரை நுரையாய்க்கக்கி இறப்பார்கள் மரணத்தை விரும்பும்படி ஏவினல் அதின் நிமித்தம் வல்லநாயனுக்கஞ்சி நடப்பார்களென்று கருதி அவர்களை மரணத்தை விரும்பும்படி கூறப்பட்டது.

95

சத்தியமாக யூதர்கள் மற்ற மனிதர்களை விடவும் முஷ்ரிகீன்களை விடவும் ஜீவித்திருப்பதில் அதிக அவிள்க்கையுள்ளவர்களென நீர் காண்பீர். அவர்களிலொருவன் தனக்கு ஆயிரம் வயசு கிடைப்பதைப்பற்றி பிரியப்படுகிறான் அங்ஙனம் அவனுக்கு ஆயுள் கொடுத்தபோதிலும் அது அவனை நரகத்தைக்கொண்டும் காப்பாற்றாது அல்லா(ஹ்)வாகிறவன் அவர்கள் புரிந்து வரும் தீவினைகளை அறிந்தவன்.

கவனிப்பு:- மனிதர்கள் என்று கூறியதில் முஷ்ரிகீன்களும் சேர்ந்திருந்தபோதிலும் முஷ்ரிகீன்களும் நெடுநாள் ஜீவித்திருப்பதில் அவிள்க்கையுள்ளவர்கள் தான். ஆதலின் அவர்களையும் சுட்டிச்சொல்லப்பட்டிருக்கின்றது. யூதர்களில் ஒருவன் தும்மினல் நீ ஆயிரம் வருஷம் வரையும் ஜீவித்திருப்பாயாக வென்று அவனுக்கு திருப்தியுண்டாக பதிற் கூறுவார்கள்.

96

முஹம்மதே யார் ஜிப்ரீலுக்கு சத்துருவென்று கேளும் அவ்வாறாயின் அவனது சினத்தால் எரிந்துநாசமாகட்டும் இக்குர்ஆன் ஷரீபை நாயனது அனுமதியின்படி அவர்தான் உமது ஹிருதயத்தில் இறக்கினார். இவ்வேதத்திற்கு முன்னுள்ள திருமறைகளை மெய்யாக்கினவராயும், துர்மார்க்கத்தை விட்டும் சன்மார்க்கத்தளவில் திரும்பிய மூமினானவர்களுக்கு சுவர்க்கத்தைக்கொண்டு நன்மாராயஞ் சொன்னார்.

கனவான்களே! ஜிப்ரீல்(அலை) அவர்கள் இறைவனது உத்திரவுகளை அறிவிக்கக்கூடிய பரிசுத்தமான தூதராயிருப்பதினால் அவரைப்பகைத்துக் கொள்ள யாதொரு முகாந்திரமுமில்லை. யூதர்களிடம் நீதியிருக்குமாயின் அவர்களைப் புகழவேண்டுமேயன்றி இகழவேண்டியதில்லை.

97

எவனொருவன் அல்லா(ஹ்)வுர்கும் அவனது மலக்குகளாகிய அமரர்களுக்கும், அவனது ரஸூலாகிய திருத்தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயீலுக்கும், சத்துருவாயிருப்பானாகில் நிச்சயமாக அல்லா(ஹ்)வாகிறவன் அக்காபிர்களுக்குச் சத்துருவாயிருக்கிறான்.

98

உம்மளவில் நாம் தெளிவான திருவசனங்களை இறக்கினோம் ஆனால் வார்த்தைக்குக் கட்டுப்படாத சண்டித்தனமுள்ளவரே யன்றி அதை மறுத்தளிக்கமாட்டார்கள். அவர்கள் தான் நிராக ரிப்பார்கள்.

99

அத்திருவசனங்கள் வெகு தெளிவாயிருக்க அவர்கள் அதை நிராகரிக்கிறார்களா? அவர்கள் தன் நாயனுக்கு வாக்குறுதி கொடுக்கும் பொழுதெல்லாம் அவர்களில் நின்றும் ஒரு வகுப்பினர் அவ்வாக்குறுதிகளை அலக்ஷியஞ் செய்கிறார்கள் எனினும் அவர்களில் அதிகமானவர்கள் ஈமான் கொண்டு முஸ்லிமாகமாட்டார்கள்

அறிந்துக்கோள்:- யூதர்கள் நாயனிடம் உன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து செவ்வையாய் நடந்துக்கொள்கிறோமென்று வாக்குறுதி கொடுப்பார்கள். அவர்களின் அநுஷ்டானமுறைகள் வாக்குறுதிக்கு முற்றும் விரோதமாயிருக்கும் நாம் நாயனுக்கு வாச்குறுதி கொடுத்துவிட்டு அதற்கு முற்றும் விரோதமாய் நடக்கிறோமென்ற பயமே அவர்களுக்கில்லை. ஆண்டவனுக்குக் கோடுத்த வாக்குறுதியை மதிக்கமாட்டார்கள். யூதர்களின் மனப்பான்மையை அறிந்து ஆண்டவன் யூதர்கள் அதிகமாய் இஸ்லாமதத்தைத் தழுவமாட்டார்களென்று கூறுகிறான்.

100

மேலும் அந்த யூதர்களிடமிருக்கிற தௌறாத்து வேதத்தை யுண்மையாக்கியவராகிய அல்லா(ஹ்)வின் தூதர் முஹம்மது(ஸல்)

இறைவனது சந்நிதானத்திலிருந்து அவர்களிடம்வரவே தௌராத்தென்னும் வேதத்தைக்கொடுக்கப்பட்டுள்ள யூதர்களில் நின்றும் ஒருசாரார் முஹம்மது(ஸல்) உண்மையான தீர்க்கதரிசியென்றும் தௌராத்கூறனது ஆண்டவன் திருவசனமென்றும் அறியாதவர்களைப்போல் திருமறை புத்தகத்தை தங்கள் முதுகின் புறமாய் எறிந்துவிட்டார்கள்.

101

சுலைமான்(அலை)அரசாண்ட நாளில் ஷைத்தான்கள் வாசித்து வந்த புத்தகங்களை அந்த யூதமதத்தினர்கள் பின்பற்றிக்கொண்டனர். வஞ்சனை புரிவது கொண்டு சுலைமான்(அலை)காபிராகவில்லை (கர்த்தாவது வஞ்சனை புரிவது குப்ரென்று சுலைமான்(அலை) வஞ்சனையை படிக்கவுமில்லை அதை புரியவுமில்லை) எனினும் ஷைத்தான்கள்தான் காபிராயினர். அவர்கள் பாபில் என்னும் நகரத்திலிறக்

கப்பட்டிருந்த ஹாரூது, மாரூது, என்றஇரு(மலக்கு) அமரர்கள் மீதிலிறக்கப்பட்டுள்ளவற்றையும் வஞ்சனையையும் மனிதர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். அவ்விருவர்களும் நாங்கள் இறைவனில் நின்றும் சோதிப்பாக இருக்கிறோம் இதைக்கற்று அதைக்கொண்டு நிர்ணயங்கொண்டவன் காபிராவான். ஆதலின் நீகற்று காபிராகாதேயென்று சொல்லுமட்டிலும் கற்பிக்கவேயில்லை, அப்படி சொல்லியும் கற்றுக்கொள்ள விரும்பியவர்கள் அவ்விருவரில் நின்றும் புருஷனுக்கும் பெண்ஜாதிக்குமிடையில் பிளவையுண்டு பண்ணக்கூடிய வஞ்சனைகளையும் கற்றார்கள். ஆனால் அதைக்கற்ற மந்திரவாதிகள் ஆண்டவன் கட்டளையிருந்தாலொழிய அவ்வஞ்சனையைக்கொண்டு ஒருவரையும் தீங்குசெய்யமாட்டார்கள். ஆனால் அவர்கட்கு பலன் கொடாமல் தீங்கு செய்யுமே அதைத்தான் அவர்கள் கற்றார்கள். ஆண்டவன் கிதாபுக்குப்பதிலாய் வஞ்சனையை வாங்கியவர்கட்கு அவ்வுலகில் ஸ்தானமில்லை என யூதர்கள் நன்கறிந்துமிருக்கிறார்கள் தங்கள் ஆன்மாவிற்குக் கிடைத்துள்ள நற்பேறை விற்று வாங்கிய வஞ்சனையும், குப்ரும் மிகக்கெட்டது அவர்கள் அதிலிருக்கும் கெடுதல்களை உணர்வார்களாகில் அவ்வாறு செய்யமாட்டார்கள்.

102

அந்த யூதர்கள் திருகுர்ஆனைக்கொண்டும் தீர்க்கதரிசியைக்கொண்டும் உண்மைகொண்டு வஞ்சனைபோன்ற தீவினைகளில் நின்றும் நீங்குவார்களானால் இறைவன் அவர்களுக்குக்கொடுக்கும் நன்மையானது அந்த யூதர்களின் தீயசெயல்களைவிட மிக மேலானதாயிருக்கும் இறைவனால் கொடுக்கப்படும் நன்மைகளை அவர்கள் நன்றென அறிந்திருந்தால் அவ்வஞ்சனைபோன்ற துன்மார்க்கத்தைத்தெரிந்துக் கொள்ளமாட்டார்கள்.

103

ஆ! மெய்விசுவாசிகளே! உங்களது நபியை நோக்கி ராஇனா வென்று கூறவேண்டாம் உன்ளுர்னா வென்று சொல்லுங்கள் உங்கள் மீதில் ஏவப்பட்டதைக்கேட்டு அதற்கு வழிப்படுங்கள் அந்த யூதர்களாகிய காபிர்கட்கு துக்கமான ஹிம்சையுண்டாயிருக்கின்றது.

இந்த ஆயத்து இறங்கியதின் விபரமாவது:- அரபி பாஷையில் ராஇனா என்ற வாக்கியத்திற்கு வழிப்படுங்கள் என்ற அர்த்தமாயிருக்கும் யூதர்களின் பாஷையாகிய அப்ரானி (ஹிப்ரு) பாஷையில் ஷை வாக்கியத்திற்கு மூடர் என்ற அர்த்தமாயிருக்கும் முஸ்லீம்கள் நபிபெருமானவர்களை பார்த்து ராஇனா வென்றழைப்பார்கள். அதுபோல் யூதர்களும் மூடர் என்ற அர்த்தத்தை ஹிருதயத்தில் நாடிக்கொண்டு சபைகளில் ரா இ னா வென்றழைத்துவிட்டு தங்களுக்குள் தனித்து நகைத்துக்கொள்ளுவார்கள் அதின் நிமித்தம் அவ்வாக்கியத்தையுபயோகிப்பதற்குப் பதிலாய் அதின் அர்த்தமமைந்த உன்ளுர்னா வென்னும் வாக்கியத்தையுபயோகிக்கும்படி ஏவப்பட்டது.

104

வேதக்காரக் காபிர்களும், விக்கிரஹ ஆராதனை காபிர்களும், உங்களது நாயனில் நின்றும் உங்கள் மீதில் வஹ்யி இறக்கப்படுவே

தைப்பற்றி அன்பு பாராட்டமாட்டார்கள். அல்லா(ஹ்)வாகிறவன் நபிப்பட்டத்தைக்கொண்டு,தான் கருதியவர்களை சொந்தமாக்கிக் கொள்வான். மேலும் அவனுகிறவன் கண்ணியமுள்ள உபகாரியாயிருக்கும்.

105

நாம் ஒரு வசனத்தை மாற்றினுலும் அல்லது அதை இறக்கப்பிற்படுத்தினுலும் அதைவிடமேலானதை அல்லது அதுபோன்றதைக்கொடுப்போம். அல்ல(ஹ்) எல்லா வஸ்துக்களின் மீதிலும் தத்துவமுள்ளவனென்று நீர் அறியவில்லையா?

இந்த ஆபத்து இறங்கியதின் காரணமாவது:- நபிபெருமானவர்கள் தங்கள் (அஸ்ஹாபி) நண்பர்களை ஒருநாளைக்கொருவிதம் நடக்கச் சொல்வதைப்பார்த்தால் முஹம்மது(ஸல்)டைய கட்டுரைஎன்று யூதர்களும் முஷ்ரிகீன்களும் கூறிவந்தார்கள் அதற்காக இந்த ஆயத்து இறங்கிற்று.

106

மேலும் வானம் பூமி இவற்றிலுள்ள ராஜியமதிகாரமனைத்தும் ஆண்டவனுக்குரியது என்று நீர் அறியவில்லையா? அறிந்தேயிருக்கிறீர் ஏ! காபிர்களே! உங்களுக்கு அல்லா(ஹ்)வைத்தவிர பாதுகாப்பவனும், உதவிபுரிபவனுமில்லை.

107

ஏ முஷ்ரிகானவர்களே! முற்காலத்தில் மூஸாயிடம் அவர்க

கூட்டத்தார்கள் கேட்டதுபோல் உங்கள் ரஸூலிடம் நீங்களும் கேட்கக் கருதுகிறீர்களா? எவனொருவன் ஈமானுக்குப் பதிலாய் குப்ரைத் தெரிந்துகொள்வானாகில் அவன் செவ்வையான வழியைத் தவிர்த்துவிட்டான்.

இந்த ஆயத்து இறங்கியதின் காரணமாவது:- (முஷ்ரிகீன்) விக்கிரஹ ஆராதனை புரியும் காபிர்கள் நபிபெருமானவர்களிடம் மூடத்தனமாய் திருமக்கமாநகரம் நெருக்கமாயிருப்பதினால் அதை விஸ்தீரணமாக்கும்படியும், சபாமலையை பொன்மலையாக்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள் இவ்விதம் செய்வித்தால் நாங்கள் உம்மை சர்வலோகரக்ஷகர் என்று ஈமான் கொள்வோமென்று கூறினார்கள்.

108

ஆப் மெய்விசுவாசிகளே! யூதர்களில் பெரும்பான்மையோர் மூஹம்மது(ஸல்)ம் அவரது சொற்களும் நிஜமென்று வெளியான பின்பு அவர்கள் மனமுரண்டாய் உங்கள் மீது பொறாமையின் காரணத்தால் உங்களை உங்களது ஈமானுக்குப்பின் காபிராக்க விரும்புகிறார்கள். மூமின்களே! அவர்களைக்குற்றம் பிடியாமலிருங்கள் ஆண்டவனது இமிசை வருமளவும் பொறுங்கள் நிச்சயமாக அல்லா(ஹ்)வாகிறவன் எல்லாவைகளின் மீதிலும் சத்துவமுடையவன்.

இந்த ஆயத்து இறங்கியதின் விபரமாவது:- நபிபெருமானவர்கள் காலத்தில் உஹுது யுத்தம் நடந்தது அதில் முஸ்லீம்கள் அபஜெயமடைந்தார்கள் அது நிமித்தம் முஸ்லீம்கள் தங்கள் மதத்தின் மீது அவநம்பிக்கை கொண்டிருப்பார்களென்று யூதர்கள் கருதி, குதைபதுல்யமானீ, உம்மா

நுப்லு பாஷிர், ரழியல்லாஹு அன்ஹுமா இவர்களிருவரையும் யூதர்கள் பார்த்து நீங்கள் உண்மையான மதஸ்தர்களாயிருந்தால் இந்த உஹதுயுத்தத்தில் அபஜெயமடையமாட்டீர்கள். நாங்கள் உண்மையான மதஸ்தர்களாயிருப்பதினால் இந்த யுத்தத்தில் வெற்றிபெற்றோம். ஆதலின் எங்கள் மதத்தைத் தழுவுங்களென்று கூறினார்கள். அதற்கு உம்மாருஎன்பவர் அந்த யூதர்களை நோக்கி வாக்குமாற்றஞ்செய்வது உங்கட்குள் எப்படி என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் அது மஹாகெட்டவையென்று பதிலிருத்தார்கள். உடனே உம்மார் (ரழி) அவர்கள் அந்த யூதர்களை நோக்கி என் ஆயுள் பரியந்தம் வாக்குறுதிக்கு மாற்றஞ்செய்வதில்லை யென்று எங்கள் நபிபெருமானவர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். யுத்தத்தில் அபஜெயமடைவதுகொண்டு எங்களது மதபக்தி நீங்கிவிடாது. பின்னுளன் உங்கள் முன்னோர்களை ஹிம்சித்துக் கேடுவிளைவித்ததின் நிமித்தம் அவர்களின் மதபக்தி நீங்கிற்றுவென்று ஆணித்தரமான பதில் கூறினார்கள். அதின் பேரில் இவர் மஹாவல்லவராயிருப்பதினால், நம்சொல்லுக்கு இணங்கமாட்டாரெனக்கருதி ருதைபா (ரழி) அவர்களிடம் அணுகி மேற்கண்டவாறு கூறினார்கள். அவர்களும் அவர்களின் சொற்களுக்கிணங்காமல் தகுந்தவாறு பதில் கூறினார்கள்.

அதின்பேரில் அந்த யூதர்கள் பிரமித்து முஸ்லீம்கள் தங்கள் நபிமீதில் அதிக பக்தியுள்ளவர்களென்று கருதி நாம் இவர்களிடம் அதிகமாய் சம்பாஷித்தால் அவர்களுக்குப்பணியும்படி நேரிடுமென்று எண்ணி திரும்பிவிட்டார்கள். இக்குநடந்த வரலாறுகளை முற்றும் நபிபெருமானவர்களிடம் தெரிவித்தார்கள். நபிபெருமானவர்கள் கேட்டு அறிவுள்ள நண்பர்களே நலஞ்செய்தீர்கள், பாவத்தை விட்டீர்கள். ஜெயம் பெற்றீர்களென்று கூறி ஆசீர்வதித்தார்கள். அதற்காக இந்த ஆயத்து இறங்கிற்று.

109

ஆய்! மெய் விசுவாசிகளே! நீங்கள் நிலைபாடாய் தொழுது வாருங்கள் மேலும் உங்களது முதல்களுக்கு (சகாது) மார்க்

வரியுங்கொடுங்கள். தொழுகை, தானதர்மம், முதலிய சகல நற்காரியங்களையும் நீங்கள் முற்படுத்துவீர்களேயானால் ஆண்டவனது சந்நிதானத்தில் அவைகளுக்கு நீங்கள் நன்மையைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்களது செய்கைகளாகிய அமல்களை ஆண்டவனாகிறவன் நிச்சயமாய் அறிகிறவன்.

110

யூதர்களும், கிறிஸ்தவர்களும், தங்களைத்தவிர மற்றவர்கள் ஒருபோதும் சுவர்க்கஞ் செல்லமாட்டார்களென்று கூறுகிறார்கள். அதானது அவர்களின் வீண் எண்ணம். முஹம்மதே அவர்களிடம் இதுவிஷயத்தில் நீங்கள் நியாயவாதிகளாயிருந்தால் உங்களது ஆதாரங்களைக் கொண்டுவாருங்களென்று சொல்லும்.

111

விஷயங்கள் உங்களது நாட்டம்போலல்ல எவனொருவன் ஈமான்கொண்டு தனது ஆன்மாவைப் பரிசுத்தமாக்குவானாகில் அவனுக்குத் தன்னுடைய நாயன் சந்நிதானத்தில் மட்டில்லாத பலனுண்டும், அவர்கள்மீதில் யாதொருபயமுமில்லை. மேலும் அவர்கள் இறுதிநாள் வாழ்க்கையில் சலிப்புற்றவர்களுமல்ல.

112

இன்னும் கிறிஸ்தவர்கள் எதிலுஞ்சேர்ந்தவர்களல்ல என யூதர்கள் கூறுகிறார்கள். அதேவிதம் யூதர்கள் எதிலுஞ்சேர்ந்தவர்கள் அல்ல எனக் கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவ்விருவகுப்பினரும் தங்கள் தங்கள் வேதத்தை நன்குணர்ந்திருக்கிறார்கள். அவ்விருவகுப்பினரும் சொல்லிக்கொள்வதுபோல் ஒன்றுமறியாத மூடமுஷ்ரிகீன்களும், எந்த மதத்தினரும் சரியானவர்கள் அல்லவென்று கூறிக்கொள்கிறார்கள். ஆதலின் அல்லா(ஹ்)வாகிறவன் கியாமநாளில் இவர்களின் விதர்ப்பமான விவஹாரங்களை நியாயமாய்த் தீர்ப்பளிப்பான்.

கவனிப்பு:- யூதர்களின் தௌராத்து வேதத்தில் பிற்காலத்தில் ஈஸா(அ'லை) வருவார்களென முன்னறிவிப்பு செய்திருக்கின்றது. இன்ஜீல் வேதத்தில் மூஸா(அ'லை)அவர்கள் உண்மையான தீர்க்கதரிசி என்று கூறப்பட்டிருக்கின்றது. இவைகளை அவர்கள் அறிந்திருந்தும் மேற்கண்டவாறு கூறிக்கொள்கிறார்கள்.

113

பரிசுத்த ஸ்தலமாகிய அல்லா(ஹ்)`வுடைய பள்ளியில் அவனது திருநாமத்தையோதி திக்ருவணக்கஞ் செய்வதை விலக்கி அதை பாழாக்க முயற்சிசெய்கிறவனைவிட அநீதிக்காரன் யார்?

ஒருவனுமில்லை அவ்வேலை புரிபவன்தான் நீசன். அவ்வாறு செய்தவர்களாகிறது அவர்கள் அப்பள்ளியில் அஞ்சி தாழ்மையடைந்தவர்களாகவேயன்றி உட்செல்லபாத்தியமில்லை.

114

அவர்களுக்கு துன்யாவில் மானபங்கம் கிடைப்பதுடன் இறுதிநாளில் கடுமையான இமிசையை அனுபவிப்பார்கள்.

115

இன்னும் உதயகிரியும், அஸ்தகிரியும் அல்லா (ஹ்) வுக்கே உரியது ஆதலின் நீங்கள் அவன் அனுமதியின்படி தொழுகையில் எங்கே முகத்தைத் திருப்புவீர்களோ அங்கு அல்லாவுடைய திசையுண்டாயிருக்கின்றது. (கர்த்தாவது அதுதான் அவன் பொருந்திய கிப்லாவின் திசை) நிச்சயமாக அல்லா (ஹ்) விசாலமுடையவன். மனிதர்கள் எங்கே தொழுதாலும் பிரார்த்தனை புரிந்தாலும் அவர்களது நிர்ணயங்களை மிக அறிந்தவன்.

இந்த ஆயத்து இறங்கியதின் விபரமாவது:— நபிபெருமானவர்களும் தங்களது (ஸஹாபா) நண்பர்களும், பைத்துல் முகத்தீஸ்பள்ளியை நோக்கி தொழுதுகொண்டு வந்தார்கள். அப்பொழுதுஆண்டவன் அதை நீக்கி கஃபாவை நோக்கி தொழுதவரும்படி உத்திரவு செய்தான். அக்கட்டளையின்படி கஃபா அளவில் திரும்பித்தொழுதார்கள். அதற்காக யூதர்கள் முஸ்லிம்களைக்குறித்து இவர்கட்கு நிலையான ஒரு கஃபா இல்லை போல் தோணுகிறது. ஒருநாள் அங்கும் ஒருநாள் இங்குமாக திரும்பித் தொழுகிறார்களென்று இகழ்ந்தார்கள் அப்பொழுது இந்தஆயத்து இறங்கிற்று.

116

மேலும் அவர்கள் ஆண்டவன்பிள்ளையை ஆக்கிக்கொண்டானென்று கூறினர்கள். அந்துஷ்டர்கள் சொல்லுவதைவிட்டும் நாயன் பரிசுத்தமானவன். மேலும் வானம் பூமி இவற்றிலுள்ள யாவும் அவனுக்குரியது. சகலரும் அவனை வணங்கும் அடிமைகளாயிருக்கும்

இந்த ஆயத்து இறங்கியதின் விபரமாவது:— யூதர்கள் உஸைரு தீர்க்கதரிசியை தேவகுமாரனென்றும், கிறிஸ்தவர்கள் இயேசு தீர்க்கதரிசியைக் கர்த்தருடைய மகனென்றும் முஷ்ரிகான அரபிகளிற் சிலர் அமரர்களை ஆண்டவனுடைய பெண்மக்களென்றும் கூறிவந்தார்கள் அப்பொழுது ஆண்டவன் இந்த ஆயத்தை இறக்கினுன்.

117

மேற்கூறியவைகள் ஐக்கியப்பட்டதுமட்டிலுமா அவனே வானத்தையும் பூமியையும் நூதனமாய் சிருஷ்டித்தான் இன்னும் அவன் ஒருவஸ்துவை சிருஷ்டிக்கக் கருதுவானுகில் அதற்கவன் சொல்வதெல்லாம் உண்டாக் கடவது என்பான் அவைகள் யாதொரு தடையன்றி தட்சணமே உண்டாகிவிடும்.

118

மக்காவாசிகளாகிய மூடமுஷ்ரிகீன்கள் முஹம்மதைநோக்கி

நீர் ஆண்டவனது ரசூலென்று எங்கள் கண்காண நாயன் எங்களிடம் பேசவேண்டாமா என்றும் அல்லது நீர் சத்தியமுள்ளவரென்று அறிவிக்கும்படியான அத்தாட்சிகளை நாங்கள் கேட்டுக் கொள்கிறபடி எங்களுக்குக் கொண்டுவரவேண்டாமா யென்றும் சொல்வார்கள். இவர்கள் கூறுவதுபோல் இவர்களுக்கு முன்னுள்ள காபிர்களும் கூறிவந்தார்கள். அக்காபிர்களின் ஹிருதயமும் இக்காபிர்களின் ஹிருதயமும் குருடானதில் இவ்விரண்டும் ஒன்றுபோலிருக்கின்றன அதனால் நீர் கவலைபடையவேண்டாம். சத்தியத்தை விரும்புகிறவர்கட்கு இதை நாம் ஒருஅத்தாட்சியாக இறக்கினோம்.

119

நிச்சயமாகநாம் உம்மை சத்தியமானமார்க்கத்தைக்கொண்டு அனுப்பினோம். ஈமான் கொண்ட உண்மை முஸ்லீம்களுக்கு சுவர்க்கத்தைக்கொண்டு நன்மாராயங்கூறினவராயும் ஈமான் கொள்ளாத காபிர்களுக்கு நரகத்தைக்கொண்டு பயமுறுத்துகிறவராயுமனுப்பினோம் ஆதலால் அக்காபிர்கள் துன்மார்க்கத்தில் மூழ்கியிருப்பதைப்பற்றி உமக்கொன்றுமில்லை. மேலும் அக்காபிாகள் நரகவாதிகளாயிருக்கும் அவர்கள் ஏன் இஸ்லாம் மதத்தை தழுவவில்லை யென்று உம்மிடம் கேள்க்கப்படவுமாட்டாது,

120

யூதர்களும், கிறிஸ்தவர்களும், உம்மை அங்கீகரிக்கமாட்டார்கள். நீர் அவர்களது மதத்தைப்பின்பற்றினாலொழிய முஹம்

மதே! நீர் அந்த இருவகுப்பினருக்கு ஆண்டவனது சன்மார்க்கம் இஸ்லாமாயிருக்கும் அதுதான் செவ்வையான மதம் மற்றெல்லாம் துர்மார்க்கமென்று சொல்லும். உமக்கு இறைவனது சந்நிதானத்திலிருந்து வஹ்யி அறிவிக்கப்பட்டுள்ள குர்ஆன் இறங்கியிருக்க அதைத்தவிர்ந்து அவர்களது இச்சைகளைப்பின்பற்றுவீருனல் உமக்கு இறைவன் இடம் காப்பாற்றுகிறவனும் உதவிபுரிபவனுமில்லை. (நபிநாயகமவர்களைப்பார்த்து இப்படி கூறியிருந்தபோதிலும் அதின் கர்த்தாவது உம்மத்துமார்களையன்றி நபிநாயகமவர்களல்ல.)

121

நம்மால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வேதத்தையவர்கள் பிரட்டாமல் அதன்படி ஓதுவார்களானல் அத்திருமறையைக் கொண்டு ஈமான் கொள்வார்கள். அங்ஙனமின்றி எவர்கள் அவ்வேதத்தைக்கொண்டு காபிராவார்களோ அவர்கள்தான் ஈமானை கொடுத்து குப்ரை வாங்கிய நட்டவாளர்களாயிருக்கும்.

இந்த ஆயத்தானது: ஜஅபர் (ரழி) அவர்களுடனே ஷாம் தேசத்திலிருந்து நபிபெருமானவர்களிடம் இஸ்லாமதத்தை தழுவுகிறதற்காக வந்திருந்த வேதக்காரர்கள் அல்லது யூதமதத்திலிருந்து இஸ்லாம் மதத்தில் தழுவிய அப்துல்லாஹிப்னு ஸலாம், ஷாஃபதுப்னு அம்று அல்லது நாயகமவர்களின் ஸஹாபாக்களாகிய தோழர்களின் மீதில் இறங்கிற்று என்று வருகின்றது:

122

179845

ஆய் இஸ்ரவேலர்களின் மக்களே! நான் உங்களுக்கு புரிந்துள்ள அருள் கொடையையும் மேலும் நான் அக்காலத்திலுள்ளவர்களைவிட உங்களை உன்னதமாக்கினதையும் உற்றுணர்ந்து பார்த்து என்மீது நன்றிபாராட்டுங்கள்.

விசேஷ அறிவிப்பு.

இத்தப்ஸீர் அரபியும், தமிழும் கலந்து அச்சிடவேண்டியதாயிருக்கின்றது. தமிழ் நாட்டிலுள்ள அச்சுக்கூடங்களில் தமிழுடன் கலந்து அச்சிடக்கூடிய அரபிஉருக்கு எழுத்துக்கள் இல்லாததினுல் எங்களது பொறுப்பில் அரபிஉருக்கு எழுத்துக்கள் தருவித்துக்கொடுப்பதாய் அச்சாபீஸில் ஒப்பந்தஞ்செய்து தப்ஸீர் அச்சிட ஆர்டர் கொடுத்திருநதோம். அரபி எழுத்துக்காக மிஸ்றுக்கு ஆர்டர் செய்திருந்ததில் எதிர்பார்த்திருந்தபடி அரபி எழுத்துக்கள் வராத காரணத்தால் குறிப்பிட்ட தேதியில் தப்ஸீர் வெளியாகவில்லை.

தப்ஸீருக்கு ஆர்டர் செய்திருந்த சந்தாநேயர்கள் திருகுர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைக்கண்ணுற அதிக விருப்பமிருப்பதாக அவரவர்களின் லெட்டர் மூலியமாய் அறிந்து இனி காலதாமதஞ்செய்வது சரியல்லவெனக்கருதி திருகுர்ஆன் ஆயத்துக்கு காலி இடம் விடப்பட்டு தமிழ்அச்சுவேலையை முடித்தும் காலியாகவிடப்பட்டிருக்கும் இடங்களில் திருகுர்ஆன் ஆயத்துகளை ஒட்டுவதற்காக முதல் பாகம் அலிபுலாமீம் ஜுஸ்வை அரபியில் தனியே அச்சடித்து தப்ஸீருடன் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனபடியால் அதை அதில் போட்டிருக்கிற நம்பர் பிரகாரம் ஒட்டிக்கொள்ளவோ அல்லது கையெழுத்தாக யெழுதிக்கொள்ளவோ அவர்களின் சவுகரியம் போல் செய்துகொள்வதற்காக நாம் ஒட்டாமல் அனுப்பியிருக்கிறோம். இந்த ஒரு பாகத்திற்கு மட்டும் எங்கள் மீது குறை கூறாமலிருக்கும்படி வேண்டிக்கொள்கிறோம். அடுத்த பாகம் அரபியும் சேர்த்தே அழகான எழுத்தில் அச்சிட்டே அனுப்பப்படும்.

☞ எம். எம்.

அறிவிப்பு.

முஸ்லீம் சகோதரர்களே!

நமது சுத்த சத்திய இஸ்லாமதத்தின் மூலாதாரமாகிய "குர்ஆன் ஷரீபானது" அரபி பாஷையிலிருப்பதினால் அதன் பொருள்களும் அதின் ஆழ்ந்த கருத்துக்களும் அரபிதெரிந்த ஆலீம்களையன்றி மற்றவர்களால் அறிந்துகொள்ள முடியாமலிருக்கின்றன.

அவைகளை யாவரும் அறிந்துக்கொள்ளும்படி நம் தாய்பாஷையாகிய தமிழில் வெளியிடவேணுமென்று பலகனவான்கள் நம்மிடம்கேட்டுக்கொண்டதற்கிணங்கி அவைகளை தமிழில் வெளியிடலானோம்.

ஷை தப்ஸீரானது மிகப்பெரியதாயிருப்பதினால் அதை ஏககாலத்தில் அச்சிட்டு வெளியிடவும் அதை ஏககாலத்தில் வாங்கி வாசிக்கவும் மிகக்கஷ்டப்படுமெனக்கருதி சகாயமான சந்தா ஏற்படுத்தி 30—ஜுஸுவுகளையும் 30—பாகங்களாக வகுத்து பிரதிமாதந்தோறும் ஒவ்வொரு பாகமாக வெளியிட ஏற்பாடுசெய்து முதல்பாகம் அலிபு லாம்மீம் ஜுஸ்வு 80பக்கத்தில் வெளியாகியிருக்கின்றது. இந்த முதல் பாகத்தில் இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கின்றது அது அடுத்த பாகத்துடன் சேர்ந்துவரும். மேலும் எந்தெந்த இடங்களில் பிக்ஹு தேவைப்படுமோ அந்தந்த இடங்களில் ஹனபி, ஷாபி மத்ஹபின் ஹுகும்களும் சேர்க்கப்பட்டு தப்ஸீர் முற்றுப் பெறும் வரையும் அரபிமாதந்தோறும் ஒவ்வொரு பாகமாக வெளியாகிக் கொண்டே வரும்.

இது கலப்பற்ற சுன்னத்துல் ஜமாஅத்தின் தப்ஸீர் என்று இதை வாசிக்கும் நண்பர்களுக்கு நன்றாய் விளங்கும். இது சந்தாநேயர்களுக்கென்று அச்சிடுகிறபடியால் ஒவ்வொரு முஸ்லீம்கனவான்களும் சந்தாதாராய்ச் சேர்ந்து இதை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா விபரம்.

சந்தா முன்பணமாக கட்டவேண்டும்.

உள் நாட்டுக்கு 1-வருஷத்திற்கு ரூ 3—0—0
வெளி நாடுகளுக்கு ,, ரூ 4—0—0

எமது உஸ்தாது திருநெல்வேலி பேட்டை மவ்லானாமவ்லவி செ. செய்கு அப்துல் காதர் சாஹிபு அவர்களால் கோர்வை செய்யப்பட்ட நேர்வழிவிளக்கம் தீன்மணி முழக்கம் அச்சாகி வெளிவந்திருக்கிறது.

கிளேஸ்தாள் புத்தகம் 1=க்கு ரூ 2—4—0

மானேஜர்;—

சுன்னத்துல் ஜமாஅத்தி தப்ஸீர், காரியாலயம்,
ரவணசமுத்திரம், கடையம் போஸ்டு, S. I. R.

ரவணசமுத்திரம், எம். மக்தூம் ஆலிம் சாஹிபு அவர்களால், வெளியிடப்பட்டு,
அம்பாசமுத்திரம், அகஸ்தியர் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.